குமரகுருபரன்



மலர் 16] 1965-௵ மாசி ௴ 1 ௳ (12-2-65) [இதழ் 2

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஒய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20. நுங்கம்பாக்கம் ஹைரோடு. சென்னை-6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules. 1956.
FORM IV (SEE RULE 8)
R. No. 1485/57.

Statement about ownership & other particulars about "KUMARAGURUPARAN" -(Monthly)

1.	Place of Publication	...Srivaikuntam
2.	Periodicity of its publication	...Monthly
3.	Printer's Name	...Kumaraguruparan Achakam
	Nationality	...
	Address	...Sakattukara Street ...Srivaikuntam
4.	Publisher's Name	T. M. Kumaraguruparan Pillai B. A., B. L.,
	Nationality	...Indian
	Address	Permanent President. 'Srivaikuntam Sri Kumaraguruparan Sangam'
5.	Editor's Name	T. M. Kumaraguruparan Pillai B. A., B. L.,
	Nationality	...Indian
	Address	...Managing Editor ...Srivaikuntam
6.	Names and addresses of individuals who own the newspapers and partners or shareholders holding more than one percent of the total capital	...Srivaikuntam Sri Kumaraguruparan Sangam' ...(Registered under ActXXI of 1860)

I, T.M.Kumaraguruparan Pillai. hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

T. M. Kumaraguruparan Pillai B. A., B. L.,

13—2—1965, Signature of Publisher.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16 | குரோதி-ஷூ மாசி திங்கள் 1-ம்வ [12-2-65] | இதழ் 2

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 10)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

சிவபிரான் பாம்பைப் பணியாகக் கொண்டது எத்தகைய வன்மையைத் துணைக்கொண்டு? இதுவும் கேள்விதான். கேட்பது எளிது. அக்கேள்விக்குத் தக்க விடையிறுப்பது அரிது. பாம்பை அணிந்த சிவன், அதனது நஞ்சை அடக்குதற்குத் தக்கதோரு பாயம் கைக்கொண்டுதான் அதனைத் துணிந்தணிவான். பணியைப் பணியாக அணியத் துணிவு எப்படி உண்டாயிற்று அப்படிச் சடையனுக்கு? வேதாகமங்கள் இதைப் புகழாகக் கொண்டு பொருள்சேர் புகழாக வாழ்த்துப் புகல்கின்றனவே!

அவ்வாழ்த்து வம்பாக அன்றோ இருக்கின்றது? அறிஞர் எல்லாரும் இங்கு வம்பு என்ற சொல்லின் பொருளை நிச்சயம் செய்து கொள்ளல் வேண்டும். அகராதியில் 26 பொருள் உள. தொல்காப்பியர் சொல்லிய பொருளே இங்கு உரியது. இது நிலைக்குமோ?

> "கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தார் என்று
> மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே"—

கடவுளை இறைவன் என்பர். இறை - இறைவன், துறை - துறைவன் என்பன போலுஞ் சொற்கள் சிற்சிலவே தமிழில் உள்ளன. பிறை-பிறைவன், நறை-நறைவன், முறை-முறைவன் என்பன அன்றும் இல்லை. இன்றும் இல்லை. முன்னவற்றுள் இறைவன் என்றதன் பொருளை அறிய ஓரிடம் காட்டுதும்.

> "பூமலி நீரு றையுள் புள்ளேறு புட்கொடி
> வாய்மைவே லாழி படைக்கலம்—நாமம்
> பிரம விறைக்கண்ணன் பொன்றிக்கார் மேனி
> கருமம் படைப் பழிப்புக் காப்பு."

இவ்வெண்பா முப்பத்து நான்கு யாண்டுக்கு முன்னர் யாப்பருங்கலத்துரையிற் கண்டது. இது பெயர் நிரல் நிறைக்கு வரலாறுக வுள்ளவற்றுளொன்று. மும்மூர்த்திக்கும் உறையுளும் கொடியும் படைக்கலமும் பெயரும் மேனியும் செயலும் கூறுதல் இப்பாட்டமைப்பு. உருத்திரனே இதில் 'இறை' எனப்பெற்றான்.

1. பிரமன்.

(1) பிரமன் உறையுள், (தாமரைப்) பூ; (2) கொடி அன்னப்புள்; (3) படைக்கலம் வாய்மை: அஃதாவது ஆப்தவாக்யமான வேதம். 'வேதவாக்கா' என்ற கருத்தும் பொருந்தும். இவ்விருகருத்தாலும் வேதத்தை 'வாய்மை' எனல் முன்னோர் வழக்கம். 'நால்வேத நெறிதிரியினும் திரியாச் சுற்றம்' என்ற புறப்பாட்டுச் சொற்றொடர்ப் பொருளாலும் ஈதுணரப்படும். நால்வேத நெறியொழுகுவோர் திரிவர். அந்நெறிதிரியாது. அதன் திரியாமை மந்திரிச் சுற்றமும் திரியாது என்றதை உறுதிப் படுத்துகின்றது. (4) பிரமனது நாமம் (பெயர்) பிரமன் (முதலிய பலவுள எனினும் இங்குக் கொண்டது ஈது); (5) அவனது மேனி பொன்மேனி; (6) அவனது கருமம் படைப்பு;

2. கண்ணன் (விஷ்ணு):

(2) திருமாலின் உறையுள் நீர் (பாற்கடல்); (2) கொடி கருடப் புட்கொடி; (3) படைக்கலம் ஆழி (சக்கிராயுதம்); (4) நாமம் கண்ணன் (முதலியன); (5) மேனி கார்வண்ணம் ('கார் வண்ணன்'); (6) அவனது கருமம் காப்பு (உடலுக்கும் உயிர்க்கும் பிரிப்பை விளைக்கும் தீங்குகளைத் தடுத்தல்).

3. (உருத்திரன் ஆகிய) இறை.

(1) இறைவனது உறையுள் மலை (கயிலை); (2) கொடி ஏற்றுக்கொடி (ஏறு:– 'விடையேறு பெருமான்' 'கொல்லேற்றுப் பாகர்;) (3) படைக்கலம் (முத்தலை) வேல் (திரி சூலம்) ['வடிவேறு திரிசூலம் தோன்றும்' 'சூலப்படையானைச் சொன்ன தமிழ் மாலை'] (4)நாமம் இறை. (5) மேனி தீ. ['தீவண்ணன் திறம் ஒரு காற் செப்பு'] 6. இறையது கருமம்:– அழிப்பு.

இங்கே 'இறை' என்பதன் பொருளும், அப்பெயர் சிவனுக்கே உரியது என்பதும், அதனுற்ருன் முன்னோர் சிவனை அல்லாது ஏனைக் கடவுளரை 'இறை' எனக் குறியாரானதும் நன்கு விளங்கும். விளக்கம்:– இறுதல்-அழிதல். இறுத்தல்-அழித்தல். உலகு இறுதல் உறும்படி இறுப்பவன் உருத்திரன். அதனுல் இறு என்னும் முதனிலை(யடி)யாகத் தோன்றும் பெயர் அழிப்புக் 'கடவுளுக்'கே உரியதாயிற்று. இவ்விரட்டைமணி மாலைப் பாடலிலும் 'இறை' என்பது முத்தலைவேலின் அழித்தல் வன்மையைக் கொண்ட கூர்மைக்கு அடையாய் நின்றது.

அண்ணல் என்றது ஈண்டு நடராசப் பெருமானை. அவனது முத்தலை வேலில் அயில் (-கூர்மை) இருக்கின்றது. அக் கூர்மை (அயில்) இறை (அழிப்புக்) கொண்டது. அயில் இறை கொண்டிருப்பது. முத்தலைவேல் இறை கொண்டிருக்கும் அயில் உடையது. இருத்தல் சினைவினை. (இறை) கொண்டமையும் அதுவே. 'கொண்டு' என்னும் வினை எச்சம் 'இருக்கும்' என்னும் பெயரெச்சத்தைக் கொண்டது. சினைவினையாகும் அப்பெயரெச்சம் முதலாகிய 'முத்தலை வேல்' என்னும் பெயர் கொண்டது. வேல் இருக்கும் என்றதன்று. 'அயிலிருக்கும் வேல்' என்றதாம்.

அண்ணலுக்கு முத்தலை வேல் என்னே? என்பது வினு? தில்லைவனத்தில் ஓர் மயில் (சிவகாமவல்லியம்மை) இருக்க பாம்பை அஞ்சுவதேன் அண்ணல்? பாம்பை அஞ்சாரேல் கறை கொள்வாரோ (நஞ்சுண்பாரோ?)நஞ்சுண்டு அப்பாம்பை அணிந்ததேன்? அஞ்சியதால் தானே. மறைகள் 'கறைகொண்டு' நச்சரவக்கச்சணிந்தார் என்று வாழ்த்துகின்றன? 'எம்மறையில் எவ்விடத்தில் இவ்வாருய வாழ்த்து உளது என்பதை வேதம் வல்லார் வாய்க் கேட்டுணர்க கறை-நச்சுத் தியால் ஆகும் கறுப்பு. அது நஞ்சிற்குக் காரியவாகு பெயராயிற்று. கறை கோடல்-நஞ்சினை உணவாகக் கொள்ளல். பாம்பை அணிவதற்காக நஞ்சினை உட்கொண்டார் என்பது கவியுள்ளமாகக் கொள்ளல் கூடும். பாம்பணிந்தது முந்தியும் நஞ்சுண்டது பிந்தியும் ஆகக் கொண்டு இப்பாடலை நோக்கலாகாது. அப்பாம்பை அணிதலின் முன்னமே நஞ்சுண்டதாகக் கொண்டு பாடியது இது. நடந்தது எப்படியோ? கவி கொண்டு பாடியது இப்படி. நாமும் இப்படியே கொண்டு இதன் பொருட் சுவையை நுகர்தல் நன்று. கவியும் தம் கருத்தாகச் சொல்லவில்லை. மறை வாழ்த்தியதாகச் சொன்னுர். அதனுல் உண்டதும் அணிந்ததும் பற்றிய கால ஆராய்ச்சி கவியைப் பொறுத்ததன்று. மறைக்கே தள்ளி விடலாம். 'கறை கொண்டு....கச்சணிந்தார் என்று மறை கொண்டு வாழ்த்தியது' என்றதால், கவிக்கும் அக்கால ஆராய்ச்சிக்கும் இயைவு யாதும் இல்லை.

ஒரு கால் நஞ்சுண்டும் பாம்பால் துன்பம் உண்டாகுமோ? தன்நஞ்சை யுட்கொண்டவரையும் பாம்பு மீண்டும் கடித்து நஞ்சுறுத்திக் கொல்ல வல்லதாயிருக்கலாம் என்ற அச்சத்தால் வேலும் கைக்கொண்டார் அம் 'மூவிலைவேல் மூர்த்தி'யார். அதுவும் ஒரு தலைவேல் அன்று. முத்தலைவேல். முத்தலை வேலை நீர் சுவற விட்ட அறுதலை வேல் ஏந்திய முருகனைத் தந்தையினும் இருமடங்கு ஆற்றல் உடையவன் எனலாம் போலும். ஆற்றல் குறைந்தவனுக்கும் படை முதலியவற்றின் அளவு மிகல் உண்டு. 'அறுக்க மாட்டாதவளுக்கு ஆயிரத்தெட்டு அரிவாளாம்' (பழமொழி). 'அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டிய வேல்' அவன் வேல். அதனைக் கந்தபுராணத்திற் காண்க. திருமுருகாற்றுப் படையுரையால் சிறிதும் விளங்காது.

மயிலிருக்கும் இடத்தில் பாம்புகள் இரா. இரா எனினும் (வனத்தில் இல்லை எனினும்) அவர் உடம்பில் உண்டு. வனத்தில் இருக்கும். ஆயினும் அப்பாம்பை மயில் கொன்றிடலாம். உடம்பில் இருக்கும் பாம்பை மயில் கொல்வது எப்படி? அது கறை கொண்டவனுடம்பு. உடம்பின் அகத்திலே கறை. புறத்திலே முத்தலை வேல். மயிலுக்கும் முத்தலை வேலைக் கண்டால் அச்சம் உண்டாகும் என்றோ? அஞ்சும் காட்டு மயில், நமக்குப் பேரின்பம் காட்டும் மயில், பெருந்துன்பம் ஓட்டும் மயில் அஞ்சுமோ? வனத்து மயில் என்று பாடவில்லை. 'ஓர் மயில்' என்றுதான் பாட்டில் உளது. இறையின் செம்பாதியில் இருக்கும் மயில் சிவகாமவல்லியம்மை. அம்மயில் ஒரு மயிலுமாகும். ஓர் (கின்ற) மயிலுமாகும். கறை கொண்டு அரவம் அணிவதேன்! கையில் முத்தலைவேல் ஏன்? என்று ஒரும் மயிலும் ஆகும். 'ஓர் மயில்' என்பதை வினைத் தொகையாகக் கொள்ளலாகாது. அம்மையின் செம்மையாற்றலைக் குறிக்க வினைத்தொகைப் பாற்படுத்தி எழுதியது இது. ஞானமே அம்மை எனப் படுவதை உளங்கொள்க. வகாரம் சத்தி, சிகாரம் சிவம் என்ற உண்மையை உணர்க. ஞானம் ஒன்றே உணர்வது (ஓர்வது: மரூஉ.)

" கரும்புற்ற செந்நெல் வயற்கம லேசர்கண் டார்க்கும்அச்சம்
தரும் புற்றி னிற்குடி கொண்டிருந் தார்;அது தானும் அன்றி
விரும் புற்று மாசுணப் பூண்அணிந்தார்; வெவ்விடமும் உண்டார்;
சுரும் புற்ற கார்வரைத் தோகையங் கான துணிவு கொண்டே."

என்னும் திருவாரூர் நான்மணிமாலை (35)ப் பாடலைக் கொண்டு இதன் பொருளைத் தெளிக. இதிற் கூறிய புற்றிலேயே குடியிருக்கும் பெருந் துணிவு அதிற்கிடைக்காத நற்பேருகும்.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member. Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 1-ன் தொடர்ச்சி

ஞானபாதத்தின் நான்கு படிகளிலும் கிட்டுவன
Attainment at each of four Gnana Stages

56. ஞானத்தின் ஞானுதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னுமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே.

The Gnani attaineth all the four stages in Gnana;
Gnana-in Gnana is to transcend the "I"and "Mine"
Yoga-in Gnana is to envision the Light of Nadanta;
Kriya-in Gnana is to seek the salvation good.

ஞான பாதத்தின் நான்கு படிகளுக்கும் ஞானி உரியவனு கின்றுன். ஞானத்தில் ஞானம் என்பது "நான்" "எனது" என் பதற்ற நிலே. ஞானத்தல் யோகம் நாதாந்த ஒளியினைக் காண டல்; ஞானத்தின் கிரியையாவது நன் முத்தி நாட்டமாகும்.

ஞானி துவைத நிலேயைக் கடந்தவன்
The Gnani attains the unitive wisdom in the Absolute

57. நண்ணிய ஞானத்தின் ஞானுதி நண்ணுவோன்
புண்ணிய பாவங்கடந்த பிணக்கற்றேன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே.

He who realizeth Gnana in its four divisions
He doth transcend verily the duality of Virtue and Vice;
He hath reached the furthest shores of Truth;
He hath glimpsed the mighty Object;
He is the Immaculate, the Siddha, and the Siva Mukta.

ஞானத்தின் நான்கு பாதங்களையும் அடைந்தவன், புண்ணியமென்றும் பாவமென்றும் சொல்லப்படும் கருத்துக்களிலே எழும் துவைத உணர்வைக் கடந்தவன்; பேரறிவின் கரையினைக் கண்டவன்; ஞேயப்பொருளைத் தரிசித்த ஞாதுரு; உறுதி படைத்த தூய்மையாளன்; சிவத்துவ நிலையை அடைந்த முத்தன்; வல்லமை பெற்ற சித்தனும் ஆவான்.

58. ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதய
ஞானநிர் வாணமே நன்றறி வானருள்
ஞானபி டேகமே நற்குரு பாதமே.

In Gnana are the baptismal rites four;
Samaya initiates the search for the Self;
Visesha the search for the Over-Self;
Nirvana is the descent of the Lords Grace;
And Abhisheka the all attainment of the Divine Gurui's Holy Feet.

ஞானிக்குரிய சமய தீட்சையினால், "நான்யார்?" என்னும் நாட்டம் தொடங்குகின்றது. விசேட தீட்சையினால் பரதரிசனம் கைவரப் பெறுகின்றது. ஞானநிர்வாண சுத்தி சத்திநிபாதம் பெறத்துணைபுரிகின்றது; ஞானபிடேகம் பெறும் பொழுது, நற்குருவின் பாதம் கிட்டுகின்றது.

சன்மார்க்கத்தின் உட்பொருள் உணர்ந்தோர்

They who knew the inner meaning of Sanmarga

59. சாற்றும் சன்மார்க்கமாம் தற்சிவ தத்துவத்
தோற்றங்களான சுருதிச் சுடர்கண்டு,
சீற்றம் ஒழிந்து, சிவயோக சித்தராய்க்,
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந்தார்களே.

They glimpsed the Light of Holy Scriptures,
-the revealed word of the Self-Existent Sivam,
They lost the sense of ego,
Became Siddhas of Siva yoga,
And over Death triumphed;
Only they that had thus evolved
Knew the meaning inner of Sanmarga.

எவராலும் படைக்கப்பெருத சிவத்தின் உண்மையை விளக்கும் வேதாகம நூல்களின் ஒளியைக் கண்டவராய், ஆணவம் நீங்கப்பெற்று, சிவயோக சித்தராகி, இறப்பினை வென்றவர்களே சன்மார்க்க நெறியின் உட்பொருளை உணர்ந்தவர்களாவார்.

வென்ருர் சன்மார்க்கமாம் குறிப்பறிந்தார்கள்-என்று கூட்டுக.

வரி 3 சீற்றம்-ஆணவம், காரியம்காரணத்துக்காயது. சுருதிகள் தற்சிவ தத்துவத்தின் தோற்றங்கள் என்பதை சிவஞானசித்தியாரின், "அநாதியே அமலனுப அறிவனூலாகமம் நான்" என்ற பாட்டானும் அறிக. (அளவை இலக்கணம்-13)

சன்மார்க்கநெறி நந்தி வகுத்தது

Nandi Showed Sanmarga Path

60. சைவப் பெருமைத் தனி நாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

The peerless Master Nandi
Of Saivam honoured high,
He showed us a holy path
For Souls redemption true
It's Sivas divine path, Sanmarga's path
For all world to tread
And for ever be free.

சைவ சமயப் பெருமையையுடைய ஒப்பற்ற தலைவனும் நந்திதேவன் ஆன்மாக்கள் வீடுபெற வகுத்த நெறி ஒன்றுள்ளது; அது தெய்வநெறி; குருநெறி; சிவநெறி; சன்மார்க்கநெறி எனவும் படும். அதனைச் சார்ந்து ஒழுகினல் உலகத்தோர் அனைவருமே வீடு பெறலாகும். (தொடரும்)

வலிமனத் துணிவு

திரு. பொ. முத்தரசு அவர்கள், M. A., B. T.,
தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லூரி,
அருள்நந்திநகர் – ஸ்ரீவைகுண்டம்.

கல்லாட நூலின் நான்காவது பாடல் "பிரிவருமை கூறி வரைவு கடாதல்" என்னும் துறையைச் சார்ந்தது. களவொழுக்கத்தின் சிறப்பெல்லாம், தலைவனையும் தலைவியையும் கற்பு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் குறிக்கோளில் தான் அமைந்துள்ளது. களவு வழிப்பட்ட கற்பே இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பெரிதும் விதந்து போற்றப் பெறுவது. கற்பு வாழ்க்கைக்குரிய பண்பு நலங்களை யெல்லாம், காதலர் களவு வாழ்க்கையிலேயே அன்பினால் ஒன்றி ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்வதன் வாயிலாகப் பெறுகின்றனர். ஆதலால் ஒன்றிய அவர், பிரிதல் என்பது அருமையினும் அருமையே. ஆனால் நடைமுறைப் பழக்க வழக்கங்களும், சமுதாய நெறி முறைகளும், காதலர் இடையீடின்றிக் கலந்து அளவளாவுதற்குப் பற்பல தடைகளைத் தோற்றுவிக்கின்றன. இவற்றை யெல்லாம், பொறுமையோடு ஏற்று. உரிய வழிகளால் கடந்து, தலைவியை முறைப்படி திருமணம் செய்து கொண்டால், தடையற்ற இன்ப அன்பு வாழ்க்கையைப் பெறலாம் என்பது, இது போன்ற துறைப் பாடல்களின் கருத்து ஆகும். ஒருவரை ஒருவர் இன்றி அமையாத தலைவனும் தலைவியும் பிரிதல் என்பது பொறுத்தற்கரிய துன்பம் பயப்பது என்ற கருத்தை வற்புறுத்த முற்படும் கல்லாடர் தவிர்க்க இயலாதபடி பிரிவு நேர்கிறது என்பதையும் உடன் உணர்த்துவதற்காகத் "தினைமுதிர்வு உரைத்தல்" "மயிலொடு கூறல்" ஆகிய துறைகளுக்குரிய கோவையார்ப் பாடல்களையும் சுவைபெற இணைத்துக் கூறியுள்ளமையை இதனுள் காணலாம்.

திருக்கோவையார் :

[தினை முதிர்வுரைத்தல்]

மாதிடங் கொண்டம் பலத்துநின் ருேன்வட வான்கயிலைப்
போதிடங் கொண்டபொன் வேங்கை தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசித்தன் கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு வித்தது தூமொழியே !

[பிரிவருமை கூறல்]

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவிசெய் தாழ்புனத் தைவனங் கொய்யவும் இவ்வனத்தே
பிரிவுசெய் தாலரி தேகொள்க பேயொடும் என்னும்பெற்றி
இருவிசெய் தாளின் இருந்தின்று காட்டும் இளங்கிளியே!

[மயிலோடு கூறல்]

கணியார் கருத்தின்று முற்றிற்று யாஞ்சென்றும் கார்ப்புனமே
மணியார் பொழில்கார் மறத்திர்கண் டீர்மன்னும் அம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்காள் அயில்வேல் ஒருவர்வந்தால்
துணியா தனதுணிந் தாரென்னும் நீர்மைகள் சொல்லுமினே !

இம்மூன்று திருக்கோவையார்ப் பாடல்களும் ''வரைவு கடாதல்''என்னும் நோக்கம் உடையன ஆதலின் இவை, தலைவன், தலைவியைக் காணவந்து மறைவிடத்தில் நிற்க, அதனை அறிந்தும், அறியாதாள் போலத் தோழி கூறுவனவாக அமைந்துள்ளன. இதனைச் சிறைப்புறமாகக் கூறுதல் என்பர் இலக்கண ஆசிரியர்.

பேயோ டாயினும் பிரிவு அரிதே:

"மாதோடு அம்பலத்தில் ஆடுவது ஆன்ருேர் வழக்கத்துக்கு மாறுன செயல். அதனை அறிஞர் பொருந்தா ஒழுக்கம் என்பர். ஆனல் மாதொரு பாகனுகிய கூத்தப் பிரானே அம்பலத்தில் ஆடுகின்ருன். அவனுக்குரிய மலையில் உள்ள வேங்கையும் அவனைப் போலப் பொருந்தாத செயலைக் கொண்டுள்ளது. இதுவரை தினைப்புனங் காப்பதற்கு எங்களுக்கு நிழல் தந்து உதவியது. ஆனல் இன்று, பழகிய எங்களுக்கே கேடு சூழ்ந்துவிட்டது பொன்னிறப் பூக்களைத் தோற்றுவித்துத்

தினையைக் கொய்யலாம் என அறிவித்துவிட்டது. [ஆகவே எங்களுக்குத் தினைப்புனக் காவலும் இல்லை; தலைவனைக் கண்டு மகிழ்ந்து அளவளாவும் வாய்ப்பும் இல்லை] எனவே நாங்கள் பிரியவேண்டிய கட்டாயநிலை வந்துவிட்டது. பேயோடு பழகி விட்டாலும் பின்பு பிரிவது முடியாத ஒன்று, என்று பெரியோர் பேசுவர். அதற்கு எடுத்துக் காட்டாக இக்கிளிகள் போன்ற பறவைகள் இருக்கின்றன. தினை முழுதும் கொய்யப்பட்டு, வெறும் தாள்கள் மட்டும் இருக்கும் இத்தினைப் புனத்தைப் பிரிய மாட்டாமையால், இப்பறவைகள் இதனிடை மீட்டும் மீட்டும் வந்து தங்குகின்றன. [ஆனால் நாங்கள் இவ்வுண்மையை உணர்ந்தும் தங்கும் வாய்ப்பில்லாமல் தவிக்கின்றோம்.] சோதிட ராகிய வேங்கையார் கருத்து நிறைவேறிவிட்டது. 'மயில்களே! கூரிய வேலையுடைய தலைவர் ஒருவர் வருவார்; அவர் வந்தால், வேங்கைச் சோதிடர் சதி செய்யத் தினைப்புனத்தைச் சுற்றத்தார் கொய்துவிட்டனர். எனவே இனிப் புனங்காக்கும் வேலை இல்லை; பிரிதற்குத்துணியக் கூடாதாயினும், வேறு வழியின்றிப் பிரியத் துணிந்து வீட்டுக்குச் சென்று விட்டோம்' என்று கூறுங்கள்.''

இச் செய்திகளைத், தலைவியை உளப்படுத்திக் கூறும் தோழி தலைவன் மனத்தில் நன்கு பதியும் வண்ணம் கூறுவதோடு, திருமணம் செய்துகொள்ள முற்படாது காலங் கடத்தும் அவனே, பிரிவுத் துன்பத்துக்குப் பொறுப்பாவான் என்றும், தாங்கள் எவ்விதத்திலும் பொறுப்புடையவர் இல்லை என்றும் வற்புறுத்தி, இனித் தலைவியைக் காண்பதற்கு வாய்ப் பில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்தித் திருமணத்திற்குத் தூண்டுகிறாள். தலைவியைக் காண வேண்டு மென்பதிலும், அவளைப் பிரிவுத் துயரில் தவிக்க விடல் ஆகாது என்பதிலும் நாட்டமுள்ள தலைவன் திருமணத்துக்கான முயற்சிகளில் ஈடு படுதல் வேண்டும்; ஈடுபடுவான்; ஈடுபடுதல் அவன் கடமை; என்பதை உய்த்துணரலாம்.

கல்லாடனார் காட்டுவது:

இங்ஙனம் மூன்று வெவ்வேறு பாடல்களில் காணப்படும் இக்கருத்துக்களை, கற்பனை நயமும், காரண காரிய நயமும் தோன்றச் சுவைபெற இணைத்துத் திரட்டிக் கல்லாடனார் ஒரே

பாடலில் கூறுகிறார். திருக்கோவையாரில் சுட்டப்பெறும் கயிலைப் பரங்குன்றிற்குப் பதிலாகக் கூடல் பெருமானது பொதிய மலை இடம் பெறுகின்றது. அம்மலையின் சாரலிலேயே தினைப்புனத்தில் இந்நாடகம் நடைபெறுகிறது. தினைப்புனம் கொய்யப் பட்டமையும், அதனால் வேலையிழந்து வீடு திரும்பவேண்டிய நிலைமை கட்டாயமாக நேர்ந்து விட்டமையும், அதற்குக் காரணமான வேங்கைச் சோதிடரின் படிற்றொழுக்கமும், அவரது திறமையான சோதிடக் குறிப்பும், இப்பாடலில் மிக அழகாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. கூடற்பெருமானது புகழ்பாடு மிடத்து தக்கனது வேள்வியும், அதனை அழிக்க இறைவனால் நெற்றிக்கண்ணினின்றும் தோற்றுவிக்கப்பெற்ற வீரபத்திரக் கடவுளின் வரலாறும் சுருக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்தப் படுகின்றன.

ஊமன் கனவு:

உலகனைத்தையும் அருளால் பெற்றுக் காப்பவள் இறைவன் இடப்பாகத் துறையும் அன்னையாகிய உமை. அவளைத் தன் மகளாகப் பெறும் பெரியதோர் தவம் செய்தவன் சிறுவிதியாகிய தக்கன். அவன் பிரமதேவன் புதல்வனாதலின் சிறுவிதி எனப்பட்டான். உமா தேவியாரை மகளாகப் பெற்று, உரிய காலத்தில் இறைவனுக்கு மணமுடித்துக் கொடுக்கும் பேறும் பெற்றதனால் இறைவனைத் தன் மருமகனாக எண்ணினான். ஆணவ வெறி தலைக்கேறியது. தானே யாவரினும் உயர்ந்தவன் என்பதை நிலைநாட்டவும், சிவபெருமானை இகழவும் ஒரு பெரு வேள்வியைத் தொடங்கினான். வேள்வியில் தரப்படும் அவியுணவை உண்ணுவதற்காகத் தேவர் அனைவரும் அங்குக் கூடினர். தந்தையின் வேள்வியாயிற்றே என்று அதனைப் பார்க்க வந்த மகளாகிய உமா தேவியை இகழ்ந்து, இறைவனையும் பழித்தான். அருளே வடிவமான அன்னை சினந்து மீண்டாள். அவள் சினங்கண்ட பெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தான். அக்கணத்துத் தோன்றினான், வீரபத்திரன் என்னும் பேராற்றலுடைய பெருமான். எண்ணற்ற படைக்கலங்களை ஏந்தியவனாக, இறைவன் ஆணை பெற்றுத் தக்கன் வேள்வி நடைபெறும் இடம் சென்றான். தெய்வ உணர்வும், அருள் நெஞ்சமும்

இல்லாது, இருளே குடிகொண்ட தக்கனது பெருவேள்வியை அழித்து, அவன் தலையை அறுத்து, ஏனைய தேவரையும் தக்க வாறு ஒறுத்து இறைவன் ஆணையை நிறைவேற்றி, நெறி முறைமையினை நிறுவினன். அங்கு வந்து வயிறார அவி உண்ணலாம் என்றிருந்த கடலனைய பெருங் கூட்டமாகிய தேவர்கள் எண்ணமெல்லாம் ஊமனுர் கண்ட கனவாகப் போயிற்று. அங்ஙனம் அருள் விளையாடல் புரிந்த ஆலவாய் அண்ணலுக்குரிய பொதிய மலைச் சாரலில் உள்ள தினைப்புனம் இப்பாடலில் காணப்பெறும் நிகழ்ச்சிகளுக்குரிய நிலைக்களமாகத் திகழ்கின்றது.

குன்ரு வாய்மை

பொதிய மலைச் சாரலில் உள்ள தினைப்புனம் முழுவதும் கொய்யப்பட்டு, வெறும் தாள்களே நிற்கின்றன. ஆயினும் அவற்றில் வழக்கம்போல் மயிலும், கிளியும், குருவியும் வந்து படிகின்றன. அவை தமக்குப் பெரியதோர் நீதியை அறிவுறுத்து வதாகத் தோழி கருதுகிருள். இப்பறவைகள், அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைகளைப் போல உற்றுழித் தீர்வன அல்ல. ஆனுல் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல ஒட்டி உறை கின்ற உறவுடையவை. எனவே நன்றி மறவாத மாண்புடை யன. வள்ளுவர் பெருமான் முப்பாலுள், நன்றிமறவாமையை வற்புறுத்தியது போன்று வேறு எதனையும் வற்புறுத்தவில்லை என்பதுவே அறிஞர் துணிபு. கோவையாருள் "பேயோடு ஆயி னும் பிரிதல் இயலாது" என்று கூறப்பட்ட கருத்தை "நன்றி செய்குநர்ப் பிழைத்தோர்க்கு உய்வில" என்னும் குன்ரு வாய் மையைப் பறவையினங்கள் உணர்த்துவதாகக் காட்டும் கல் லாடனுர் விளக்கம் வியக்கற்பாலது.

வலிமனத் துணிவு

"இங்ஙனம் இருவியாய்ப்போன தினைப்புனத்தைப் பறவை யினங்களும் பிரிதல் ஆற்ரு என்பதைக் கண்டும் நாங்கள் பிரியத் துணிந்து விட்டோம். அந்த அளவுக்கு எங்கள் மனம் வலிமையுடையது போல ஆகிவிட்டது. உண்மையில் பிரியும் எண்ணம் இல்லையாயினும், இனி இப்புனத்தில் காவற்பணி இல்லையாதலின் பிரிதலைத் தவிற வேறு வழி இல்லை. என்ன

செய்ய வல்லோம்? எங்கள் உள்ளத்தில் படிறு இல்லை. இதற்குக் காரணம் யார் என்பதையும் கூறுகிறோம். மானினங்களே! சற்று எங்கள் பேச்சைக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று தோழி கூறும்போது மறைவில் நிற்கும் தலைவன் உண்மையை உணரத் தவற மாட்டான் அல்லவா? புறத்தே வலிமையும் துணிவும் உடைய மனம் போலவும் பழகியவரைப் பிரிந்து துன்பத்தில் ஆழ்த்தி விட்டுப் போகும் படிற்றொழுக்க முடைய மனம் போலவும் தோன்றினும் உண்மையில் அன்பால் குழைந்து நெகிழ்ந்த உள்ளம் என்பதைப் புரிந்து கொள்ள இயலாதவனா தலைவன்? இந்த அன்புள்ளம் கொண்ட தலைவியைப் பிரிய அவன் ஒப்புவானா? மாட்டான். விரைவில் திருமணத்திற்கான முயற்சிகளைத் தொடங்குவான் என்பது குறிப்பு. இதனைக்

குன்று வாய்மை நின்றுநிலை காட்டித்
தங்குவன கண்டும் வலிமனம் கூடி
ஏகவும் துணிந்தனம் எம்பெரும் படிறு
சிறிதுநின்று இயம்ப உழையினம்! கேண்மின்!

என்னும் பாடற் பகுதியில் காண்க.

வேங்கைக் கணியரின் வீறு:

பின்னர், படிறு செய்தவர் யார்? என்ற வினா எழும் அல்லவா? படிறு செய்தவர் வேங்கைச் சோதிடர் என்கிறாள் தோழி. அதனை மிகத் திறமையாகச் செய்து விட்டார் என்கிறாள். அதிலும் புதைபொருள் நிரம்ப இருக்கிறது. "மலைச்சாரலில் வாழும் குன்றவர் வலியவர். வலிமைக்குச் சான்று, அவர் எய்யும் கொடிய அம்புகள் மலைபோன்ற பெரிய யானையின் மத்தகத்தைத் துளைப்பது மட்டுமல்லாமல் உடலையும் ஊடுருவிச்செல்லும். அத்தகைய முரட்டு மனிதர்க்குத் தங்க நிழல் கொடுத்து அமைதியாக அமரச் செய்து, அவர்கள் உள்ளத்தில் நன்கு பதியும் படியாகத், தினையைக் கொய்வதற்கும், வேறு பொன்னணிதல் போன்ற திருமணத்தை ஒட்டிய சடங்குகளுக்கும் நாட்குறித்துக் கொடுத்து எங்களுக்குக் கேடு சூழ்ந்து விட்டார். அவர் எங்களுக்கு வேறானவரும் அல்லர், எங்கள் தினைப் புனத்துக்கும் எங்களுக்கும் மிகவும் நெருங்கியவர்."

இவ்வாறு தோழி, காலக் கழிவையும், இயற்கையாக வேங்கை பூக்கும் காலம் தினை கொய்யும் காலம் என்பதையும், குன்றவர் மக்கள் பொன்னணியப் போகின்றனர் என்பதால், தலைவி பிரிவாற்ருது பசலை பூப்பாள் என்பதையும், அது பெற்ரோர்க்குப் புலப்படின் ஏதம் பெரிது என்பதையும் கூறுவதோடு தலைவியை அவள் இல்லத்தில் சென்று மறைவாகக் காண்பதோ, காணமுயல்வதோ, தலைவனுக்கு நன்மை பயவாது என்பதைக் குன்றவர் வீரத்தை உணர்த்து முகத்தால் குறிப்பில் புலப்படச் செய்வதையும் காணலாம். காலம் கழிகின்றது என்ற உணர்ச்சி கூட இல்லாதவன் போல தலைவன் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்தது பொருத்தமற்றது, என்பதை இதைவிட வேறு வகையில் இடித்துரைக்க இயலாது. ஓரறிவுடைய வேங்கை, ஆறறிவுடைய குன்றவர் முன்னிலையில் கணியராய் அமர்ந்து, மலர்க்கையில் ஏடு தாங்கி, அதனை அவிழ்த்து நாள் குறித்துக் கொடுத்தது மிக மிகத் திறமை வாய்ந்த செயலே. இயற்கை நிகழ்ச்சி தற்குறிப் பேற்றமாக, எவ்வளவு அழகாகவும், கவர்ச்சியாகவும், சிந்தனையைத் தூண்டும் முறையிலும் தோழியால் எடுத்தோதப் பெறுகிறது என்பது இப்பாடலால் இனிது விளங்கக் காணலாம். இத்தகைய எழிலுடைக் கற்பனைகளே இலக்கிய உலகில் என்றும் பொன்ருப் பொலிவுடன் வாழும், என்பதில் ஐயமும் உண்டோ?

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

18

Births and deaths are always chasing the souls To escape from this ever threatening evil and to reach the birthless state of eternity, only the Supreme Power can help us with all its grace. All our other relationship with men and matter of this earth are not per -menent and helpful. Hence, if we want to attain salvation and to be relieved of the bondage, we must make ourselves worthy of the Lord's Grace in full. And this is expressed in the song that follows.

ஆர்இருந்தென் ஆர்போயென் ஆரமுதா நின்னருளின்
சீர்இருந்தால் உய்வேன் சிவமே பராபரமே!

(பொ – ரை) சாவினின்றும் காப்பாற்றும் ஆற்றல் இல்லாதார் இருந்தென்ன? போனால் என்ன? பயன் ஒன்றும் இல்லை! சாவினின்றும் காப்பாற்ற வல்ல அரிய அமுதமாகிய உன் திருவருளின் துணை இருந்தால், அடியேன் பிழைப்பேன் சிவனே!

Oh...Lord Supreme!, what it matters to me of those who are living and dying and who cannot save me from deaths? But Your Grace, the Nectar Divine will save me from deaths and give salvation too.

———

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

திருவெம்பாவை

திரு. A. C. ஷண்முக நயினர் அவர்கள்,
அட்வகேட், தென்காசி.

[மலர் 16. இதழ் 1-ன் தொடர்ச்சி]

இறைவனைக் குறிக்கும்போது :– கார் மலர் - கழுத்தில் கருவிடமணிந்தவன், நீலகண்டன், செங்கமலம் - திருவடித் தாமரை அங்கங்குருகு - கொக்கிறகு முதலியன அணிந்தவன்; பின்னும் அரவம் - பாம்பையணிந்தவன். இறைவியைக் குறிக்கும்போது :– குவளைக்கார் மலர் - நீலோற்பலம் போன்ற கண், செங்கமலப் பைம்போது-தாமரை போன்ற திருமுகம். அங்கம் குருகினத்தால்-கையில் வளையல் வளையலாக அணிந்தவள். பின்னும்அரவம் - பின்னப்பட்ட சடைநாகம் என்னும் ஆபரணம் அணிந்தவள்; பொங்குமடு - இருவருக்கும் பொதுவாகிய அருட் கடல் : மலப் பற்றுள்ளவர் இம் மடுவில் வந்து சார்ந்தால் அப்பற்றுவிடும். அதையே மலங்கழுவுவார் வந்து சார்தல் என்ருர். நீர் நிலை சென்று நாம் நம் புற அழுக்கை நிக்கிக் கொள்கின்ரேம். அதே போல் அக அழுக்கு நீங்க வேண்டுமாயின் இறைவன் அருளாகிய மடுவிற்சென்று முழ்கி நீக்கிக்கொள்ள வேண்டும். இறைவன் அம்மையப்பராயிருக்கும் நிலை இத்திருப்பா அழகாக உணர்த்துகின்றது. மலங்கழுவுவார் என்றதால் ஆன்மாக்கள் உண்டென்பதையும் கழுவப்படும் பொருள் மலம் என்றும் கழுவிவிடுவார் இறைவன் இறைவியென்றும் கழுவும் முறை அவர்கள் அருளாகிய மடுவில் குளித்தல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இது பதி பசு பாச உண்மை.

தவிர இப்பாட்டு தீக்ஷை வகையும் குறிக்கின்றது. கார் மலர் - கண்ணைக்குறிக்கும். நயன தீக்ஷையாகும் செங்கமலப் பைம்போது - இருதயதாமரை - இருதயத்தில் நிலைத்தலால் தீக்ஷையாகும் மானசதீக்ஷை : அங்கம்குருகினந்தால் : குருகுகள்

அடைகாத்தல் போல சிஷ்யனைத் தொட்டுத் தீக்ஷை செய்தல் ஸ்பரிஸ தீக்ஷையாகும். காலம் - ஓசை-இது உபதேச தீக்ஷையைக் குறிக்கும்.

இதுவுந்தவிர ஐந்தொழில்களையும் குறிப்பாகக் கூறுகின்றார். மலர் - சிருஷ்டி : ஆக்கல் : குருகினம் - காத்தல்: கார் - இருள் அழித்தல். பின்னும் அரவம் மறைத்தல் குளத்தில் அரவங்கள் பின்னிக் கிடத்தலால் இது தலை இது வாலென்று கூறமுடியாது; செங்கமலப்பைம்போது : அருளல். இன்னொருபாட்டு ஆராய்வோம்.

"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
த்ன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்" 16

மழைப்பாட்டு என்று இது கூறப்படும். ஸ்ரீ ஆண்டாளும் திருப்பாவையில் இதுபோல் ஓர் பாட்டு 4-வது (அழகாக)ப் பாடியிருக்கிறாள். இலக்கியச் சுவை நிறைந்தது இப்பாடல் உவமையணி. மழையே! கடல் நீரைக் குடித்து கடலைச் சுருங்கச்செய்து மேற்சென்று மேகமாகி இறைவியின் நிறமாகிய கார்நிறம் பெற்று அவள் இடையில் அணிந்திருக்கும் ஒட்டியாணம் நிறம் போல் மின்னி, அவள் திருவடியிலுள்ள சிலம்புகள் போல முழங்கி (இடி இடித்து) அவளுடைய கண் புருவம் போல இந்திரதனுவாகிய வானவில் காட்டி அன்பர்களுக்கு அருள்செய்யும் வகையில் மழையாய் பொழிவாயாக என்றது கருத்து. அருள்புரியக் காத்திருக்கும் இறைவன் அருளுமுன் இறைவி அருள் செய்கின்றாளாம். இதனால் இறைவியின் அருளை முதலில் பெற வேண்டும் என்பது.

எல்லாம் உடைய இறைவனின்றும் வேறுபாடு இல்லாதலால் இறைவி உடையவள். ஆன்மாக்கள் ஆணவத்தில் மூழ்கியாதும் அறிய முடியாது கிடத்தல் கேவலநிலை. இந்த நிலையிலும் ஆன்

மாக்கள் ஆண்டானுக்கு உடமையே. அதனுல் இறைவி உடையாள். அந்த ஆன்மாக்கள் அருளால் உடல் கலன் உலகம் ஊண் முதலியபெற்று வாழ்தல் சகல நிலே. இந்நிலேயில் இறைவி எம்மையாளுடையாள் ஆன்மாக்களுக்கு மெய்யுணர்வு நல்கி சிவத்தோடு கூட்டுதலால் எம்பிராட்டி என்பது. இது சுத்த நிலேயில் ஏற்படும். இம்மூன்று நிலேகளேயும் இப்பாட்டு குறிக்கும்.

"அண்ணு மலேயான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்ருற்போல்
கண்ணர் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி இத்தனேயும் வேருகிக்
கண்ணுர் அமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணே!இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!" 18

இப்பாட்டு ஆன்மாக்களின் இறுதி நிலேயையும் இறைவனின் அத்துவித நிலேயையும் கூறுகின்றது. பிறவியின் நோக்கம் அண்ணுமலேயின் அடிக்கமலஞ் சேர்தல். அதாவது அடிசேர் முத்தி. இது சைவ சித்தாந்தக் கருத்து. திருவள்ளுவர், திருக்குறள் கடவுள்வாழ்த்து அதிகாரத்தில், இறைவனடியே குறிப்பிடுகின்ருர். சிவஞான போதம் 12-ம் சூத்திரமும் "செம்மலர் நோன்ருள்" என்றே குறிப்பிடுகிறது.

சூரிய ஒளி வர இருள் நீங்கும். இதுபோன்று இவருள்ளம் தோன்றமல இருள் அகலும். சூரிய ஒளியில் நட்சத்திரங்களின் ஒளிமங்கிவிடும். அதாவது சூரிய ஒளியில் அடங்கிவிடும். அதுபோல இறைவன் நிறைவில் ஆன்மாக்கள் அடங்கும். இதனுல் நட்சத்திரங்களாவது ஆன்மாக்களாவது சூரியனுடன் இறைவனுடன் ஒன்ருகிவிட்ட தென்பதல்ல. தங்கள் ஒளிமங்கி விடுகிறது. பேரொளியாகிய இறைவனுக்கடங்கி அவன் அருளும் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. ஆன்மா.

இறைவன் உயிர்களுடன் ஒன்ருயும், வேருயும், உடனுயும் இருக்கின்ற உண்மையையும் உணர்த்துகின்றது.

பெண்ணுகி யாணு யலியாய்: விண்ணுகி மண்ணுகி—ஒன்ருய்:
இத்தனையும் வேருகி—வேருய்: கண்ணரமுதமுமாய்—உடனுய்.

ஒருபொருளைப் பார்க்கக் கண் மட்டுமிருந்தால் போதாது. ஒளிவேண்டும். ஒளியின்றேல் கண் பார்க்கமுடியாது. அவ்வொளி பார்க்கப்படும் பொருள்மேலும் படவேண்டும். கண் பார்ப்பதற்கு ஆன்மபோதமும் வேண்டும். இதுபோல் இறைவன் நமக்குள் உடனுய் நின்று அருள் பாலிக்கின்ருன். இது அத்துவித நிலை. சைவ சித்தாந்தத்தின்படி சுத்த அத்துவிதம் என்று கூறப்படும். ஒன்ருயும், வேருயும், உடனுயும் நிற்கும் நிலையைத் திருஞான சம்பந்தர்,

"ஈருய்முத லொன்ருயிரு பெண்ணுண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானுய்
வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழ லையே" என்றும்,

"குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே"

என்றருளியிருக்கின்ருர்.

சுற்றம்நீ...சோதி நீ - சுற்றம் - இறைவன் ஒன்ருயிருத்தல், பிரான் - அவற்றின் வேருய்த் தானேயாயிருக்கும் நிலை, தொடர்ந்து இலங்குசோதி - அவற்ருெடு உடனுய் நிற்கும் நிலை. "அவையே தானேயாய் இரு வினையில் - போக்கு வரவு புரிய ஆணையில் – நீக்கம் இன்றி நிற்கும் அன்றே" என்பது சிவஞான போதம்.

இறுதிப் பாட்டில் இறைவனின் ஐந்தொழில் குறிப்பிடு கின்ருர். முதற்பாட்டில் இறைவனுக்கு "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" என்ற மாணிக்கவாசகர் இறுதிப் பாட்டில் முதல் இரண்டு அடிகளிலும் "நின்னுதியாம் பாதமலர்" "நின்னந்தமாஞ் செந்தளிர்கள்" என்று ஆதியும் அந்தமும் உண்டென்று ஐயப்படும்படி பாடியிருக்கின்ருர். இவ்விரண்டு பாட்டுகளும் முரண்பட்டதாகத் தோன்றுகின்றதல்லவா. முரண்பாடு ஒன்றுமில்லை. முதற்பாட்டில் இறைவன் தன்மை

யைக் குறிப்பிட்டார். இறுதிப்பாட்டில் பொருள்களின் தன் மையைக் குறிப்பிடுகின்ருர். பொருள்களையெல்லாம் தோற்றி வைக்கின்றவன் இறைவன் ஆதலால் அவன் எல்லாவற் றிற்கும் ஆதியாகிருன். பின்பு அப்பொருள்கள் எல்லாம் அவனிடமே ஒடுங்கி விடுகின்றன. ஆதலால் அவன் எல்லா வற்றிற்கும் அந்தமாகிருன்.எதில் ஒடுங்குகிறதோ அதிலிருந்து தோற்றம் உண்டாகிறது. இக்கருத்தை மூன்ருமடியில் "எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்"—என்று கூறப் பட்டிருக்கிறது. 1.தோற்றம் - ஆதி 2. அழிவு அந்தம் 3, மறு படியும் (2) லிருந்து தோற்றம். சிவஞான போதம் முதற் சூத்திரம் ஞாபகம் வைத்துக் கொண்டால் இக்கருத்து தெளிவாகி விடும். "அவன், அவள், அதுவெனும் அவை மூவினைமையில்– தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்–அந்தம் ஆதி என்மனுர் புலவர்." எவ்வளவு அழகாக சைவ சித்தாந்தத்தின் நுண் பொருளை பக்திப்பாடலில் உள்ளுறையாக வைத்துவடித்துக் கொடுத்திருக்கின்ருர். 1, 2 அடியில் ஆதியும் அந்தமும் கூறிய பின் 3.4.5.6.7. அடிகளில் தோற்றமும் அந்தமும் திரும்பக் கூறு வானேன்? 1. 2. அடிகள் சடப்பொருள்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றிற்கு தோற்றமும் அழிவுந்தான் உண்டு. ஆனுல் ஆன் மாக்களுக்கு ஐந்தொழில் (3.4.5.6.7) பொருந்தும். இதுவே காரணம். ஈற்றடியா மார்கழி நீராடல் என்பதை யாம் ஆர்கழி நீராடல் எனவும் பிரிக்கலாம் "ஆழ்ந்த அருட்கடல்" எனப் பொருள்படும். இதுகாறும் கூறியதால் மாணிக்கவாசகரின் பக்திப்பெருமையும் திருவெம்பாவைப் பாட்டுகள் அத்துடன் இலக் கியச் சுவையுவையும் கலந்து எம்மை மகிழ்விக்கிறது, என்பதும் சற்றே அறிந்தோம். இதுமட்டுமல்ல. அகப்பொருளையும் இப்பாக் களில் காணலாம். கன்னிப்பெண்கள் தக்க கணவர்களை வேண்டி நோன்பிருக்கின்றனர்.

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதி"

(9) இது பக்திக்காதல். காதலரைக் காணும் கன்னிப் பெண்கள் காதலரின் ஊர், பேர், யார் உற்ருர் அயலார் அவரைப் போற்றும்

பரிசு என்ன என்று விசாரிக்கின்றனர். (10) இது உலக வழக்கை ஒட்டியது. திருமணஞ் செய்யுமுன் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும்போது ஊர் பெயர் பந்துக்கள் திருமண நிபந்தனைகள் விசாரிப்பது இன்றுநாம் கண்கூடாக காண்கின்றோம். காதலனைத் தேடியபின் அவன் மேலுள்ள காதலன்பு முதிர்கின்றது. உண்மைக்காதலி, காதலனையே நினைத்துக்கொண்டிருப்பாள். மொழி, மனம், மெய் ஒன்றுபட்டு வேறுசிந்தனையிராது. வேறு ஒருவரையும் பொருட்படுத்த மாட்டாள். காதலுக்கே பித்தராவாள் (15) திருமணம் ஆகின்றது. காதலியனுபவிக்கும் இன்பம் ஒப்பற்றது.

சிவபிரானிடம் ஆழி பெற்ற செங்கயிலவன்பாலாவது சிவ பெருமான் தேர் ஒட்டும் பெருமை பெற்று இன்பமடைந்த நான் முகன்பாலாவது விஷத்தைச் சிவபெருமான் உண்ண அமிர்தத் தைத் தாங்கள் உண்ட தேவர்கள் பாலாவது இக்காதலியடைந்த இன்பம்போல் இல்லை. (17) காதலி உத்தமக் கற்புடையவள். சிவனடியாரைத் தவிர வேறு ஒருவரையும் கண்ணுற் கூடக் காணமாட்டாள். இந்நிலையில் கதிரவனையும் பழிக்கமாட்டாள். எங்கெழுந்தாலென்ன? (19) தங்காதலாரகிய சிவனடியார் இருக்க இதெல்லாம் பெரிதா? என்ன உறுதிப்பாடு! இவ்வாருக அகப்பொருளையும் திருவெம்பாவையிற் கூட்டி நாம் இன்புறும் படி செய்த பெருமை மாணிக்கவாசகர்க்கும் உரியது.

மாணிக்கவாசகர் சிவனடியார் கூட்டத்திலிருக்கவே விரும் கின்ருர். அதனுலேயே திருவெம்பாவையில் சிவனடியாரைச் சிறப்பாகக் கூறியிருக்கின்ருர். "அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்" "தன்னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாம்"

சமுதாய வாழ்வின் (Social Life) சில குறிப்புகளையும் திருப்பாவையிற் காணலாம். மாணிக்கவாசகர் காலத்தில் அதிகாலையில் எழுந்து பக்தர்கள் இறைவன் புகழ் பாடி வீதி வீதியாய் வருவது வழக்கம் (பஜனைக் கூட்டம் வருவது) கோயில் களில் அதிகாலையில் சங்குகள் ஊதுதல் உண்டு. பெண்கள் கூடிச் சுனையிற் போய் நீராடல், திருமணம் ஆகும் போது பெண்ணைக் கணவன்பால் ஒப்பிவித்து "உங்கையிற் பிள்ளை உனக்கே

அடைக்கலம்'' என்று கணவன் கடமையை நினைவு படுத்துதல். இறைவன் வீதிகளில் உலா வந்து இல்லங்கள் தோறும் காட்சி கொடுத்தல். பெண்கள் ஒட்டியாணம் அணிதல். தலையிற் பூச் சூடல். பற்களை முத்துப்போல் வெண்மையாய் வைத்திருத்தல். இவைசில. நீராடிய பின் பார்வதி தேவியை வணங்குவது முன்னே (கூறப்பட்டது).

குறிப்பு : சுத்த அத்துவித நிலையில் "ஒருபுடை யொப்பாக ஒன்றும் நிலைக்குத் திருஞானசம்பந்தரையும் வேறும் நிலைக்குத் திருநாவுக்கரசரையும் உடனும் நிலைக்குச் சுந்தரரையும் உதாரண மாகக் கூறுவர் அறிஞர்.

இத்துணை பெருமை வாய்ந்த திருவெம்பாவையைப் பாடி இறைவனின் திருஅருளைப்பெற முயல்வது நமது கடமை யல்லவா? இக்கடமையைச் செவ்வனே செய்து முடித்தால்தான் பிறவியின் பயன் நமக்குக் கிடைக்கும்: அதாவது பிறவித்தளை நீங்கிப் பேரின்ப நிலை எய்தலாம்.

கடைசியில் ஒரு வார்த்தை. திருவாதிரை யன்று நடராசப் பெருமான் முன்ஒரு காராம் பசு கொண்டுவரப்படுகிறது. பசு ஆன்மாவையும் கார்நிறம், ஆன்மா, ஆணவ இருளில் மூழ்கி யிருப்பதையும் குறிக்கும். பசு நடராசப் பெருமானுக்கு முதலில் வாலைக்காட்டி நிற்கும். இது ஆன்மாக்கள் இறைவனை மறந்து உலக வியாபாரங்களிலே மனதைச் செலுத்தும் நிலை.பின் பசு வுக்கு ஒரு கட்டி சாதம் கொடுக்கப்படும். பசு தின்னும். இது உலக அனுவபங்களைக் குறிக்கும். இதற்குப்பின் பசுவுக்கு முன் ஓர்கண்ணுடி காட்டப்படும். பசுவை இக்கண்ணுடியைப் பார்க்கச் செய்வார்கள். பசுதன் சாயலைக் கண்ணுடியிற் காண்கிறது. ஆன்மாக்கள் உலக அனுபவம் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்று தன்னை யுணர்கின்ற நிலை இது. இறுதியில் பசு திரும்பி நின்று நடராஜப் பெருமானைத் தரிசிக்கும். ஆன்மாக்கள் மெய்ஞானம் பெற்றுத் தன்னையுணர்ந்த பின் இறைவனையும் அறிந்து அவனரு ளைப் பெறுகின்ற நிலை பெருமானுக்கு தீப ஆராதனை நடக்கும் இது இறைவன் ஆன்மாக்களுக்கு திருஅருட்பேறு அளித்தல்.

திருச்சேய்ஞலூர்

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.
திருப்பனந்தாள்.

காவிரியின் வடகரைத்தலங்கள் அறுபத்து மூன்றனுள், நாற்பத்தொன்ருவது தலமான இந்தச் சேய்ஞலூர் இன்று சேங்கனூர் என மருவி வழங்குகின்றது. இத்தலம், கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்பது கற்றெலைவில் இருக்கிறது. இத்தலத்துக்கு அண்மையில் ஒவ்வொருகற்றெலைவில் 'திருஆப்பாடி' 'திருப்பனந்தாள்' ஆகிய இருதலங்களும் இருக்கின்றன. கும்பகோணத்திலிருந்து அணைக்கரை செல்லும் பெருவழியிலே அமைந்துள்ளன இத்தலங்கள். சேய்ஞலூர் மேயவனைத் திருஞானசம்பந்தர் 'நூலடைந்த கொள்கையாலே' என்னும் பழந்தக்க ராகத்தில் பாடிப்பரவுகின்ருர். இறைவன் திருநாமம் 'சததகிரீசுரர்'; இறைவியின் திருநாமம், 'சகிதேவி' என்பதாகும். எல்லாக் கோயில்களிலும் இருந்தருளும் சண்டேசுரநாயனுர் இத்தலத்தில் அவதரித்தாரென்ருல் அதன்பெருமையை அளவிடற்கரிதேயாம். ஞானசம்பந்தப் பெருமான் அந்த நாயனுரது பெருமையைப் பாடுகின்ருர்:

"பீரடைந்த பாலதாட்டப் பேணுதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளைவேர்த்தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவகுத்த தென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே!

தந்தையின் தாளை வெட்டிய சண்டேசுர நாயனுர்க்கு மாலை சூட்டினுர் சிவபெருமான்; தொண்டர்க்குத் தலைமையாக்கினுர். இந்த நிலையினை எண்ணி வியக்கின்ருர் சம்பந்தர்.

சோழரது பழைய மரபின் முடிசூட்டும் பதி ஐந்தில் ஒன்ருன சேய்ஞலூரைச் சேக்கிழார் பெருமான் இனிமையாகப்பாடுகின்ருர்.

"பண்ணின் பயனும் நல்லிசையும்
பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனும் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ?"

சேய்ஞலூரின் பெருமையை ஒருவரம் பறுத்துக் கூற இயலாதெனப் பேசுகின்ற சேக்கிழார், காசிபகோத்திரத்துத்தலை சிறந்த அந்தணராம் எச்சதத்தனையும், விசாரருசமரையும் பற்றி விளக்குகின்றார். சண்டேசுரரின் இயற்பெயர் விசாரசருமர்; தந்தை எச்சதத்தன்.

இளமையிலே தவவுணர்வு பெற்ற விசாரசருமர் ஆனிரைகளை மேய்க்கும் பணியில் ஈடுபடலானார். இவர் ஆனிரைகளை அன்பொடு மேய்க்கும் இடம் 'திடலில், வயலில், மேய்ச்சல்தரையில்!' ஆம்; தடம் உலாவிய நீர்க்கரைமண்ணியாற்றங்கரையில்.

பசுக்கள் எல்லாம் பால் சொரிகின்ற போது இறைவனின் 'திருஅபிடேகந்தான்' அவருடைய எண்ணத்தில் உருளும். இந்த எண்ணம் தான் மண்ணியாற்றங்கரையில் ஆத்திமர நிழலிலே மணலைக் கூப்பிச் சிவலிங்கமாக்கவும், அபிடேக ஆராதனைகள் செய்து வருவதற்கும் விசாரசருமருக்குக் காரணமாக இருந்தது.

ஊராருக்கு இச்செயல் பிடிக்க வில்லை. 'மணலால் செய்த சிவலிங்கம்!—அதற்குப் பால் அபிடேகம், ஆராதனை!' இதையெல்லாம் கண்டவர்கள், தந்தை எச்சதத்தனரிடம் முறையிட்டார்கள். அவர்கள் பொருட்டு மறைந்து கவனித்தார் எச்சதத்தனர். விசாரசருமரின் மனம் உவந்த வழிபாடு அவருக்கும் அதிர்ச்சியை அளித்தது. உடனே கோபத்தோடு பாற்குடங்களைக் காலால் எற்றிச் சிதைத்தார்.

விசாரசருமர், அருகே கிடந்த கோலை எடுத்தார்; அதுவே மழுவாயுதமாயிற்று; அதைக்கொண்டு தந்தையான எச்சதத்

தனின் காலைத் தடிந்தார். உடனே இறைவன் காட்சியளித்தார். பேரின்ப வெள்ளத்துள் இருக்கும் விசாரசருமருக்கு, அப்போது இவ்வுலகமே வணங்கவும் வாழ்த்தவும் இருக்கும்படியான ஒரு நிலையினைத்தருவான் வேண்டி,

“நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய்; அடுத்த தாதை இனி உனக்கு நாம்” என்றருள் புரிந்தார் சிவபெருமான். அதோடு விட்டுவிடவில்லை. “உனக்குத் தொண்டர்க்குத்தலை வனும் சண்டீசப்பதம் அருளினோம்” என்று கூறி விசாரசருமரின் தலைமேல் கொன்றை மாலைச் சூட்டுகின்றார்.இதை,

“அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிப னாக்கி “அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்”
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்”

என்று சேக்கிழார் பெருமான் பாடுகின்றார்.

சித்தந் தெளிந்த சிவஞான அன்புடையவராய்ச் செய்த விசாரசருமரின் பணியதனைப் பிரமகுலத்தவராம் எச்சதத்தனார், வெறும் விளையாட்டெனக் கருதினார்.; அன்பால் மலிந்து அவர் செய்த இன்ப வழிபாட்டை அலட்சியக் கண்ணால் நோக்கினார்; இறைவனுக்கு ஆட்டி அபிடேகிக்கும்படியான பாற்குடத்தைக் காலால் கவிழ உதைத்தார். அந்த நிலையில் ‘சிவபூசையே மேலான தவம்’ எனக் கொண்ட விசாரசருமர், தந்தையைத் தந்தையெனக் கருதவில்லை; தவத்துக்கு உபகரணமானதே குற்ற மற்றது—பழியற்றது! அந்தப் பூசைக்கு விலகிய உயிர்முத லான பொருள் எதுவாயினும் அது அவமே என்ற முடிவில் சிவத்துரோகம் செய்த காலைத்துணித்தார். அது பாவமாயினும், சமயத்துக்கும் — சந்தர்ப்பத்துக்கும் ஏற்ற உண்மையான பொருளிலே அது புண்ணியமாகும். இதைத்தான் மணிவாசகப் பெருமான் ‘தீதில்லை’ என்றார்.

"தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்"

எத் தேவரும் பூசிக்கும்படியான திருவருள் நோக்கமாகிய கருணையே, தந்தைக்குப் பாதகம் செய்த பாலனும் விசாரசருமரைச்சண்டேசராக்கியது. இதையே திருவாசப் பாடலில் திருத்தோணோக்கத்தில் பாடுகின்றார் மணிவாசகப் பெருந்தகை.

"இமையோர் இகல்வெம்பகை கடக்கும் சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர்" என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். ஞானசம்பந்தப் பெருமானும் "சேயடைந்த சேய் ஞலூர்" என்று பதிகப்பயன் கூறுமிடத்தில் குறிப்பிடுகின்றார்.

'எம்பெருமானே! இறைவா! முறையோ' என்று வானோர் இறைவனிடம் அசுரர்களின் அட்டூழியங்களைக் கூறிப் புலம்பினார்கள். அப்பகையை வெல்லுமாறு அறுமுகனை அனுப்புகின்றான் சிவபெருமான். சூரபத்மாவைக் கடந்து அடுதற் பொருட்டு முருகன் எழுந்தருளுகின்றான். எப்படி எழுந்தருளுகின்றான்? எந்த வழியாக வருகின்றான் அந்த முருகன்?

மேகங்கள் உலவுகின்றது வானில்; அதனிடைத் தோன்றுகின்றான் கதிரவன்; அவன் கதிர்களெங்கும் கரம் கூப்பி வணங்குகின்றன. தேவகிரியை விட்டுப்புறப்படுகின்றார் செவ்வேள் தனது பெருஞ் சேனையோடும், தேவரோடும்.

காசியைக் கண்டார் முதலில். பாம்பணையில் பள்ளிகொண்டு உறங்கும் திருமாலுக்கும், உமையொருபாகனும் சிவபெருமானே பரம்பொருள் என்று சொல்லும்படியான உண்மையை மயக்கம் கொண்ட மானிடர்கள் அறியும் வண்ணம் வியாச முனிவர் எடுத்த கையினால் உணர்த்தி யருளியதான பதியே காசி. அதைக் காண்கின்றான் கந்தவேள். பின்னர் 'காஞ்சி, திருவண்ணாமலை, திருநாவலூர், தில்லையம்பதி, ஆய தலங்களைக்கண்டு களிப்புடன் வணங்கிக் கொண்டு வந்து தங்குகின்றார் சேய்ஞலூரில்.

அகத்திய முனிவரது கமண்டலத்தினின்று நீங்கிப் பூமியிலே பல கிளைகளாகப் பாய்ந்து பற்பல பெயரைத் தாங்கிச் செல்கின்றதான காவிரியின் வடகரையிலே உள்ளது மண்ணியாறு. அதன் மருங்கே வந்து சேர்கின்றார் முருகவேள்; கார்மேக மானது திரண்டு செல்லுகின்ற மதில் சூழ்ந்த மாநகரத்தின் வளத்தை – சோலைகளின் வனப்பையும் கண்ட அவ்வரதன் ‘இது நாம் இருத்தற் கேற்ற நல்ல இடம்’ என்கிறார்.

செவ்வேளின் பொன்மொழியைச் செவிமடுத்த வானவர் அழகெலாந்திரண்ட அந்நகர்க்குச் ‘சேய்ஞலூர்’ எனப்பெயரிட்டனர். இதை,

“ஏர்எலாம் உடைய இந்நகர் சேய்ஞல்
ஊரதென்று பெயர் ஓதினர் அன்றே.”

எனக் கந்தபுராணம் கூறும்.

தாம் விரும்பிய இடத்தில் பூசை செய்ய விருப்பங்கொண்ட முருகன், இந்திரனை நோக்கி “இங்கு நாம் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி அர்ச்சனை செய்ய விரும்புகின்றோம் ஆதலால் அதற்கு வேண்டிய உபகரணங்களைச் சேகரித்துத் தருக” என ஆணையிடுகின்றார். மாலும், அயனும் காணாத் திருவடியைப் பின்னர் முருகவேள் பூசிக்கின்றார். ஈசன் உமையோடு இடபவாகனத்தில் எழுந்தருள்கின்றான். உச்சிமேற்கரம் கூப்பி அஞ்சலிக்கிறார் முருகன். மைந்தனது வழிபாட்டை ஏற்றுக் கொண்ட தந்தை நொடிப்போதில் உலகமெலாம் அழிக்கவல்ல படை யொன்றை அளிக்கின்றார். அப்போது சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய தேனூறும் வாசகமதை நினைவிற்கொள்வோம்:

“இது நம்மிடம் தோன்றியதான சிறந்த படை; மாயனும், பிரமனும் இதனைப் பெற்றாரல்லர்; இப்பெரும்படையை யாரால் தாங்க இயலும்? உயிர்களை யெல்லாம் இது நாசம் செய்யும்; கொடிய சூரனது வலிய படைகளைத் தொலைத்தற்காக இதனைத் தருகின்றோம், பெற்றுக்கொள் குமரா!”— இப்படிக் கூறி அந்தப் படைக் கலத்தைச் சிவபெருமான், முருகனுக்கு வழங்கினார் என்று கச்சியப்பர் பாடுகின்றார்.

பரம்பொருளின் வடிவம் பேரிரக்கமே யாகும்; உலகில் அற நெறிமாறி உயிர்கட்குத் துன்பம் நேர்கின்ற போது அம்மெய்ப் பொருள் வெளிப்படுவது இயல்பு. சிவபரம் பொருள் முருகப் பெருமான் என வெளிப்பட நேர்ந்தது இவ்வுண்மையை விளக்குவ தாகும். முருகப்பெருமான் விரும்பித் தங்கிய இடமும், வழிபாடு செய்து படை பெற்ற இடமும் சேய்ஞலூராக இருந்தது பெரும் பேறே யாம் நமக்கு. இத்தலத்தைச் சிந்தித்தும், வழிபட்டும் பேறடைவோமாக.

"இருமைத் தம்பியர்களான நவவீரருடன்
எழிலிலக்கம் வீரரும்
எண்ணவரு தொகையிரண்டாயிரம் வெள்ளமெனும்
ஏர்கொண்ட பூதகணமும்
பொருதுபடை கைக்கொண்ட நூற்றெட்டெனும்பெரிய
பூதப்படைத் தலைவரும்
பூங்கமல நயனனும் நான்முகனும் முனிவரும்
புரந்தரனும் வானோர்களும்
கருணைவடி வானநின் புடைசூழ வேபெரிய
காவேரி நாடுவாழ்க
கைவேலினால் மண்ணிநதி யழைத்தேதேவர்
கம்மியன் தான்படைத்த
திருநகரமாம் பெரிய சேய்ஞலூர் வாழ்முருக
செவ்வாயின் முத்தமருளே
சிவபூசை செய்தருட் படையொன்று பெற்றவன்
செவ்வாயின் முத்தமருளே."

(காஞ்சி, சிதம்பர முனிவர்—க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 1-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

53. சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே.

53. O Lord of Scripture, whom the Word doth help,
Celestial light of heaven, so I but praise,
With hands meetly upraised, Thy golden feet,
Then though men tie on me two weighty stones,
And sink me in the ocean's depth, e'en then
The cry 'Hail, Siva,' would salvation be.

(தொடரும்)

Reproduced with the kind permission of Oxford University Press. Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

பேராண்மை

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

[மலர் 16. இதழ் 1-ன் தொடர்ச்சி]

மணிவாசகப் பெருமான் தமது திருக்கோவையார் நூலில் இதனையொத்த ஓவியம் ஒன்றினைத் தீட்டுகின்றார். அங்கும் இது போன்றே பெற்றோர் மணவினைக்கு இசைவுதராமற் போகவே, தலைவனும் தலைவியும் உடன்போக்கு நேர்கின்றனர். செய்தி யறிந்ததாய் தேடிச்சென்று எதிர்ப்பட்ட ஆணும் பெண்ணுமாய் இருவரைக்கண்டு வினவினாள். அத்தலைவனோ,

ஆண்டான் அருவறை ஆளியன் னானைக்கண் டேன்,அயலே
தூண்டா விளக்கனை யாய்!என்னை யோஅன்னை சொல்லியதே?

(திருக்கோவையார்–244).

திணைமாலை நூற்றைம்பது தலைவன் தான் ஆண் மகனைக் கண்டமை கூறி, தன் துணைவி ஒரு பெண்ணைக் கண்டதாகக் கழறினான். ஆனால் இத்தலைவனோ, தான் ஆண் சிங்கமனைய ஆண் மகனைக் கண்டது கூறினான். உடன் சென்றனள் ஒரு பெண் என்றோ, ஒரு பெண் உடன் சென்றதாகத் தன் துணையாள் கூறினாள் என்றோ கூறவில்லை. அதுமட்டுமன்று, 'நீ ஒரு பெண் உடன் செல்லக் கண்டனையோ' என்று ஒரு பெண் என்று கூடத் தன் வாயால் கூறாது, 'தூண்டா விளக்கினையொத்தவளே! என்ன? அன்னை என்னவோ சொல்கின்றார்களே, என்று தன் துணைவியை நேர்முகப்படுத்திவிடுகின்றான். ஒரு பெண்ணை நீ பார்த்தனையோ? என்றுகூட அத்தலைவன் கேட்காது. 'அம்மா என்னமோ சொல்கின்றார்களே' என்று வினவியதோடு அமைகின்றான்.

இதுவரை ஆடவர் இருவர் பிறன்மனை நோக்காத பேராண்மையுடன் பிறங்கியமை கண்டோம்; இனிப்பெண்டிர் இருவர் தங்களையன்றிப் பிற மாதரைத் தங்கள் கணவன்மார்கள் கூடவோ, பார்க்கவோ கூடாது என்று கருதுமாற்ருன் வெளிப்படும் பிறன்மனை நோக்காப் பேராற்றலைப் பார்ப்போம்:

கலிங்கத்துப் பரணி தரும் கருத்தோவியம் இது: குலோத்துங்க சோழன் ஆணையின் வண்ணம் கருணகரத் தொண்டைமான் கலிங்கநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்ருன். கலிங்கக் களத்தைச் சித்திரிக்கின்ருர் கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார். பல காட்சிகளில் நமக்குரிய ஒரு காட்சி:

படைக்கலம் பாய்ந்து உயிர் பறித்தலால் வீரன் ஒருவனுடைய உடல் நிலமிசைச் சாய்கின்றது; இதனைக் கண்ட அவனது மனைவி ஓடிச் சென்று தன் உடலால் தாங்கிக் கொழுநன் உடல் தரையில் படா வண்ணம் தான் முன்னம் தரையில் சாய்ந்து தன்மேல் தன் கணவனுடல் சாயுமாறு செய்கின்ருள். இங்ஙனம் செய்வானேன்? தரையும் ஒரு பெண்ணல்லவோ? (நிலமகள், நிலமடந்தை, பூமாதேவி என்பன கருதுக.) தனக்கே உரிய கணவன் தன்னையன்றிப் பிற மகளிரைச் சார்தல் கூடாது எனக்கருதி, மண்மகள் மேல் அவன் சாராவண்ணம் தன் உடல் கொண்டு தடுத்துத் தாங்கினுளாம். தாங்கியவள் அத்தோடு நின்ருளா என்ருல் அதுவுமில்லை! தன்உயிரையும் விடுகின்ருள். உயிர்விட்டதன் உட்கருத்து என்னவாம்: உயிர் பிரியும் தறுவாயிலன்ருே, தன் கணவன் சாய்ந்தான்; அவன் உயிர் பிரியின் மேலுலகம் செல்லுமன்ருே? அவ்வுயிர் விண்ணகம் செல்லுங்கால் விண்ணக மாதர் எவரும் தழுவுதல் ஆகாது, தழுவ விடக்கூடாது என்று கருதித்தான், பிரிகின்ற கணவனுயிரோடு உடன் செல்லுமாறு தன்னுயிரையும் விடுகின்ருளாம். தன் கணவன் உயிரோடு தன்னுயிரும் சென்று விண்ணக அரம்பைமார் எவரும் தன் கணவனுயிரைத் தழுவாது காப்பதற்காகத் தன் ஆவி துறக்கின்றனளாம். மண்மகள் தீண்டா வண்ணம் தன் உடலம் கொடுத்து, விண் மக்கள் எவரும் தழுவா வகையில் தன் உயிர் கொடுக்கின்ருள் பெண். இதோ பாட்டு:

தரைமகள்தன் கொழுநன்றன் உடலந் தன்னைத்
தாங்காமல் தன்னுடலால் தாங்கி விண்ணாட்
டரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்!

(கலிங் - 483. களம்பாடியது-12)

தரைமகளும் ஒரு பெண்ணாகலின்-அவள் உயிர்ப் பில்லாதவளே-மண்ணேயாயினும்-அவளும், தன் கணவன் உடலத்தைத் தாங்கலாகாதெனத் தன்னுடலால் தாங்கினாள். விண்ணக மடந்தையரேயாயினும் - எத்துணைதாம் மாந்தரைக் காட்டிலும் உயர்ந்தவர்களாயினும் தன் கணவன் தனக்கே உரியவர்; தன் ஒருத்திக்கே தீண்டும் உரிமையுண்டு. ஆயினமையின் தன் உயிரை விடுத்துத் தன் கணவன் உயிருடன் செலுத்துகின்றாள். உடல் இவ்வுலகத்தோடு நிற்பது; எனவே தன் கணவன் உடலுக்காக உடல் கொடுக்கின்றாள்; உயிருக்குத் துணையாக உயிர் கொடுக்கின்றாள். இதனால் இறந்துபட்ட அம்மாவீரன் அயல் மனைவியரை விழையாதான்; உயிருடன் இருக்கும்போது இஃது ஒல்லும்; உயிர் ஊசலாடும் போது அவனால் யாது செய்ய இயலும்? எனவேதான் தன்னுடலும் உயிரும் கொடுத்துத் தன் கணவன் திறம் காக்கின்றாள். இப்படிக் கொள்ளாது பெண்டிர் தங்கள் கணவர்கள் தங்களைத் தவிர பிற மகளிரைக் காண்டல் கூடாது, இணைதல் ஏலாது என்ற கருத்தினை யுடையவர்கள். தம் கணவன்மார்கள் உயிருடன் இருக்கும் போது பிறர் மனை நயவாது பாதுகாப்பர்; கணவன்மார் நிலைதடுமாறுங் காலத்துத் தம் உடலும் உயிரும் கொடுத்தாகிலும் தம் கருத்தை நிலைநாட்டுவர் என்பதறியலாம்.

இனி வேத நாயகரது நீதி நூல் தரும் நல்லோவியம் ஒன்று காண்பாம்; ஓவியக் கண்காட்சி காணுதற்குத் தன் மனைவியை அழைத்தான் ஒரு தலைவன். காலையில் பணிமனைக்குச் செல்லும் போதே, மாலையில் காட்சிக்குச் செல்லப் பயணப் பட்டிருக்குமாறு பணித்தும் சென்றான். மாலை வீடு திரும்பியவன் மனையாளுடன் புறப்பட்டான் ஓவியக்கூடம் நோக்கி! மனையாள் வீட்டு வாயிற் படியருகே வந்ததுதான் தாழ்த்தம், என்ன நினைத்தாளோ? என்னவோ? தான் வரவில்லை என்றாள்; இவளது மன மாற்றம் கண்ட கணவன் சினமுற்றுக் கடிந்து கொண்டான். பின் தானாகிலும்

சென்று மீள்வதாகப் புறப்பட்டான்; உடனே அவனும் செல்ல லாகாதெனத் தடுத்தாள். இவளது போக்கு கண்டு ஒன்றும் புரியாத கணவன் ஏசலானன். ஆறுவது சினமன்ரே? சினம் ஆறிய பின் உடன் வாராமைக்கும், தன்னையும் செல்லலாகா தெனத் தடுத்தமைக்கும் ஏது என்னையென வினவினனுக, அவள் பதிலிறுக்கிருள்!

'ஒவியக் காட்சியில் ஆணுருவும் பெண்ணுருவும் அமைதல் உண்டன்ரே? ஆண் ஒவிய மாறுல் நான் பாரேன்; பெண் உரு வாயின் நீர் பார்க்க யான் மனம் பொறேன்' என்ருள். இதோ பாட்டு.

ஓவியர்நீள் சுவரெழுது மோவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையா மழைத்திடவாண் சித்திரமே ருன்பாரேன்;
பாவையர்தம் முருவெனினீர் பார்க்கமனம் பொறேனென்ருள்
காவிவிழி மங்கையின் கற்புவெற்பின் வற்புளதால்.

(நீதிநூல் - கணவமனைவியரியல்பு-27)

திணைமாலை நூற்றைம்பதிலும், திருக்கோவையாரிலும் ஆண் பெண்ணை நோக்குதல் கூடாது என்பது கூறப்பட்டது. ஆனல் இங்கோ ஓவியத்தில் கூடத் தன் கணவன் ஒரு பெண்ணை -வெறும் பெண்ணுருவைக்கூடக் காண்டல் கூடாது என்று சுட்டப்படும் நுட்பம் நினைந்து நினைந்து மகிழ்தற் பாலது. காதலிருவர் ஒருவரை யொருவர் காண்டல் வேண்டுமேயல்லால்-ஒருவர் மற்ரெருவரையே தத்தம் இதயத்தில் வைத்து உள்ளும் புறமும் கண்டு நினைந்து இன்புறுதல் வேண்டுமே தவிர ஓர் ஆணே பெண்ணே, பிறர் மனைவியரையோ பிற ஆடவரையோ நோக்குதல் கூடாது. அப்படி எதிர்பாராத வகையில் உருவத் தையோ ஓவியத்தையோ காண நேரின், பால் மாருது ஆடவர் ஆடவரையும், மகளிர் மகளிரையும் பார்த்தல் வேண்டும் என்பது தமிழ்ப் பண்பாம்.

இப் பண்பு, சுக்கிரீவன் காட்டிய நகைகளைச் சீதையின் நகைகளா எனக் காணுமாறு இராமன் ஏவ, ஏனை நகைகளை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, சீதாப் பிராட்டியின் காலணி-'மெட்டி' ஒன்றை எடுத்துக் காட்டி அவை அண்ணியின் நகை களே என இலக்குவன் இயம்பியதாக வரும் இராமாயணக்

கூற்றும், இராமனும் சீதையும் எவ்வழி உறைந்தனர் எனக் கேட்ட பண்பின் செல்வன் பரதனுக்கு குகன் விடை பகரும் போது, 'அல்லை யாண்டு அமைந்த மேனி அழகனும்' என ஐந்து சொல் பெய்து இராமனைக் குறித்து, 'அவளும்' எனச் சீதையை ஒரு சொல்லில் உணர்த்தியதாகக் குறிக்கும் கம்பன் வாக்கும் ஈண்டு எண்ணற் பாலன.

இனிப் பிறன்மனை நோக்காத பண்பினைப் 'பேராண்மை' எனப் பொய்யில் புலவன் பாராட்டியதாக அமைதல் கூடாது. எத்துணையோ ஏற்றமிகு எழில் சால் இனிய பண்புகள் அமையினும் பிறன்மனை நயக்கின்ற புன்மை ஒன்று நம்மாட்டு உறையின் அஃதொன்றே ஏனை நல்ல குணங்களை யெல்லாம் நலியச் செய்து மேலோங்கிக் குணமென்னுங் குன்றேறி நின்ருரையும் கணநேரத்தில் பொன்றச் செய்துவிடும். கலம் நிறைய பால் இருப்பினும் கடுகளவு மோர் அதனை அப்படியே திரித்திடுமாப் போல, இப்பிறன்மனை நோக்கும் இழிகுணம் ஏற்றமிகு நல்லாரையும், இழிநிலைக்கு ஆளாக்கி இறுதி பயந்துவிடும். இதனை இராவணன் இந்திரன் போன்ருர் கொண்டு தெளியலாம். எனவே எத்துணைதான் பிறஇழி குணம் படைத்திருப்பினும், பிறன்மனை நயக்கும் இழிதகைமை எட்டுணையும் இல்லாதமைதல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்ருல், பிறன்மனை நோக்காமை என்ற வள்ளுவர் வரம்பிற்கு விளக்கம் தருமாற்ருன் திணைமாலை நூற்றைம்பது, திருக்கோவையார், கலிங்கத்துப் பரணி, நீதிநூல் ஆகியன விளக்கம் தந்தமை கண்டோம்; கண்ணுற் காண இயலா இக்கருத்துக்குச் சொல்லோவியம் தீட்டிக் காட்டியமை அறிந்தோம்; பிறன்மனை நோக்காமையாகிய அப் பண்புப் பேரொளி தமிழ்ப் பனுவல் பலவற்றிலும் அமைந்தொளிர்ந்து இனிமையூட்டியமை தெளிந்தோம்; அப்பண்பில்லார் பெரியோராயினும், பெருவீரரேயாயினும் பொன்றிப் போதலையுப் சான்று சிலவற்ருல் உணர்ந்தோம். உணர்ந்த நாம் உணர்ந்த வாருெழுகும் ஆண்மையுடையவராய் பெருவாழ்வு வாழ்ந்து சிறப்போமாக!

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Sundaramurthi had an admirer in Kundaiyur Kizhar, who supplied the provisions to the former's house. Once due to the failure of rains the supply was short and Kundaiyur Kizhar was worried. That night Lord Siva appeared in his dream and said that He had given him enough paddy to be sent to St. Sundarar. Kundaiyur Kizhar was overwhelmed with joy and ran to Tiruvarur to inform St. Sundarar. Having been informed in the dream of this by the Lord, Sundaramurthi was proceeding towards Kundaiyur. They met on the way and now the problem was transporting the paddy. As usual St. Sundarar appealed to God and got the heaps of paddy to Tiruvarur.

திருக்கோளிலி: பண்: நட்டராகம்

நீள நினைந்தடியேன் உமைநித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவைஅட்டித் தரப்பணியே.

"I think of you my Lord at Kolili, always and worship You everyday. I beg you 'Let not Paravai suffer'. I got paddy by your Grace at Kundaiyur. I have none to bring it to Tiruvarur. Oh Lord, kindly let it be transported."

Not only Paravaiyar's but every house in Tiruvarur was filled with the paddy that was transported from Kundaiyur to Tiruvarur by the Sivaganas (the footmen of Siva.)

(To be continued)

பழனி முருகன் பிள்ளைத் தமிழ்

பேராசிரியர்: E. S. வரதராஜய்யர், B. A.

இயற்றியது

காப்பு

சீராரும் தென்பழனித் தேவன் வரதனெனும்
பேரான் பிள்ளைத் தமிழைப் பேசுவேன்—நீராரும்
வேணியன் தந்த விகடன் உமை புதல்வன்
மாணடியைச் சென்னி வகித்து

காப்புப் பருவம்

கார்கொண்ட எழில்மேனி யரியுமெரி வண்ணனும்
கவுளொழுகு கடவிகடனும்
கவினுரு மலைமாதும் வெளியதா மரையயனும்
கற்பகக் காவி னிறையும்
ஏர்கொண்ட திருமாதும் இசைகொண்ட கலைமாதும்
எழுவரென நிலமிசைக்கும்
இனிமைதரு மகளிருடன் முப்பத்து முக்கோடி
இமையவரும் நின்று காக்க
வார்கொண்ட முலைமகளிர் அறுவரொடு மலைமகளும்
வாழ்வுபெற வந்து வனமார்
மால்தந்த மகளமரர் கோன்தந்த வனிதையிவர்
மால்கொள்ள மால் மருகனைப்
போர்கொண்ட அவுணர்படப் புலவருய வுலகுமகிழ்
பூத்தொளிரப் பொன்மலைவிலி
புகழ்செய்குரு மணியெனவே புனிதமுறு பழனிமலை
வளர்முருகப் பூ மகவையே. 1

செங்கீரைப் பருவம்

தானவர் வாழ்வினி யோய்ந்த தென்றேமனத்
தாங்கல் மிகுத்தோடத்
தண்ணளி யுற்றனம் தாழ்விலை யாமென
அமரர் தருக்கெய்தக்
கானவர் தங்குலம் கவினடைந் ததுவெனக்
கருதிக் களித்தாடக்
கலியுக வரதனென் றனைவரும் துதிசெயும்
கந்தா அந்தாளா
மானவ மருகவென் றருமைகள் பலசொலி
மால்மகிழ் வேலவனே
வாரண மயிலிவை கொடிபரி யெனமகிழ்
வடிவே மறைமுடிவே
தேனவ நீதமென் றடியர்கள் உளத்தமர்
சேயே செங்கீரை
தென் பழனுபுரி தனில்ஒளிர் தினகர்
செங்கோ செங்கீரை 2

தாலப்பருவம்

பொங்கர வம்புனை சங்கர னன்னுதல்
பொற்பறு பொறியாகிப்
புண்ணிய சரவணப் பொய்கையில் மெய்பெறு
புனிதா இனிதாகத்
துங்க மனத்தோடு சுரர்முறை யிடவவர்
துயர் போயயர் வாறச்
சூர்முதல் அசுரரை வேர்முத லறவெலும்
சூரா அதிதீரா
மங்கள முறவன வள்ளிதெய் வானையர்
மணந்திடு மணவாளா
மலைமக ளொடுமறு மகளிர்கள் மடிதனில்
வளர்ந்ததோர் வாழ்வரசே
நங்கையோர் பங்கனருங் குரு நாதனே
தாலோ தாலேலோ
நல்லவர் புகழ்பழ னுபுரி நாயக
தாலோ தாலேலோ 3

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 1-ன் தொடர்ச்சி)

தேவேந்திரன்

காஞுறு கற்பகக் காவுமு வுலகுமக்
 காவென நிழற்றுமொற்றைக்
கவிகையுங் குணதிசைக் காவலும் பிறவுமுள
 காணியுங் காணியாக
வாஞுறு கோட்டிமய மலைவயிறு வாய்த்தமலை
 மகளுக்கு மணமகற்கும்
மருமகனை யுரியதன் திருமக ளெனப்பெற்ற
 மாமடிக ளைத்துதிப்பாம்
பாஞுறு செந்நெற் பசுங்கதிர் கறித்துமென்
 பைங்குவளை வாய்குதட்டும்
பணைமருப் பெருமைமடு மடிமடை திறந்ததீம்
 பாலாறு பங்கயச்செந்
தேஞுறு டன்கடவுள் வாஞு றெனப்பெருகு
 சித்தாமிர் தஞ்சிவபிரான்
சீர்த்திப்ர தாபநிகர் தினகர புரித்தேவ
 தேவனைக் காக்கவென்றே (7)

பால் மணக்கின்ற செந்நெற்களின் பசுமையான கதிர்களைக் கறித்து, மெல்லிய பசிய குவளை மலர்களை வாயில் வைத்துக் குதப்புகின்ற பெரிய கொம்புகளை உடைய எருமைகள், நீர் மடுக்களின் மடியாகிய மடைகளைத் திறந்து சொரிந்த இனிய பாலாறு, அம்மடுக்களில் உள்ள தாமரை மலர்களிலிருந்து

சொரிந்த செவ்விய தேனுறுடன் கூடிக், கங்கையாகிய உயர்ந்த ஆறுபோலப் பெருகுகின்ற சித்தாமிர்த தீர்த்தம், சிவபெருமானது சீர்த்தியையும், விறலையும் ஒத்திருக்கின்ற தினகரபுரி என்னும் வேளூரில் எழுந்தருளி இருக்கின்ற தேவதேவனாகிய முத்துக் குமாரப் பெருமானைக் காக்க வேண்டுமென்று, நறுமணம் வீசுகின்ற கற்பகச் சோலையும், மூன்று உலகங்களும், அந்தச் சோலையைப் போன்று நிழல் தருகின்ற ஒப்பற்ற குடையும், கிழக்குத் திசை ஆட்சியும், மற்றுமுள்ள காணிகளும் உரிமையாய் அமைய வானத்தை எட்டிய சிகரங்களை உடைய இமயமலை வயிறு வாய்த்துப் பெற்ற மகளாகிய பார்வதி தேவிக்கும், அவரது மணவாளராகிய சிவபெருமானுக்கும் மருமகளாக உள்ள தெய்வயானை அம்மையைத், தனது திருமகளாகப் பெற்றுக் கொடுத்த மாமனாகிய தேவேந்திரனைத் துதிப்போமாக.

திருமகள்

மானிறக் கடவுடிரு மறுமார்பி னறவிரி
　　வனத்துழாய்க் காடுமுடி
மாயிருள் வழங்குதன் றிருமாளி கைக்கந்தண்
　　மணிவிளக் கிட்டுமுட்டாட்
கானிறைக் குங்கமல வீட்டுக்கு நெட்டிதழ்க்
　　கதவந் திறந்தளித்தும்
காதன்மை காட்டுங் கவுத்துவத் துடன்வந்த
　　கன்னிகையை யஞ்சலிப்பாம்
மீனிறப் புணரியை விழுங்குங் கடற்றானை
　　வெள்ளமொடு கள்ளமனமும்
மெய்யுமிரு ளத்திரளு மவுணக் கருங்கங்குல்
　　விடியக் கருங்குரல்விடும்
தீநிறக் குடுமிவெண் சேவலை யுயர்த்துவண்
　　சிறைமயிற் பரிநடாத்தும்
சேவகப் பெருமானை வேதபுரி வருமிளஞ்
　　சேயைப் புரக்கவென்றே. (8)

மீன்கள் நிறைந்த கடலை விழுங்குகின்ற அளவுக்குப் பெரியதான சேனை வெள்ளத்துடன், கள்ளத்தனம் நிறைந்த மனமும்,உடம்பும் இருள் அடையும்படி கூடிய அசுரராகிய கரிய

இருளை உடைய இரவு விடியும்படி, பெரிய குரல் விட்டுக் கூவு கின்ற தீ நிறமான சிவந்த குடுமியையுடைய வெள்ளைச் சேவலைக் கொடியிலே உயர்த்தி, அழகிய தோகையையுடைய மயிலூர்தியை ஏறிச் செலுத்துகின்ற பெரிய பெருமானை — வேத புரியிலே எழுந்தருளி யிருக்கின்ற இளஞ் செல்வனைக் காக்க வேண்டுமென்று, கடல்நிற வண்ணனுகிய திருமாலினது அழகிய மறுவையுடைய மார்பில், தேன் துளிக்கின்ற நல்ல திருத் துழாய்க்காடு மூடித் திண்ணிய இருளை உண்டாக்குகின்ற தனது தங்குமிடமாகிய திருமாளிகைக்கு, அழகிய குளிர்ந்த மணி விளக்கை இட்டும், முட்களை நிறைந்த தண்டுகளை உடைய வாசனை வீசுகின்ற செந்தாமரை வீட்டுக்கு, நீண்ட இதழ்களாகிய கதவைத் திறந்து கொடுத்தும், சூரியன் போலவும், மணி விளக்குப் போலவும் அன்புரிமை காட்டுகின்ற கௌத்துவம் என்னும் ஆபரணத்துடன் அமர்ந்த, கன்னியாகிய திருமகளை வணங்குவோமாக!

கலைமகள்

துறைபட்ட மறையவன் செந்நாப் படிந்துதன்
சுதைநிறஞ் சிதைவுருமே
தொன்மறை கனிந்தூறு மண்பனீ ருறலிற்
றூத்துகி னனைப்புருமே
நறைபட்ட வெண்டோட்டு நளினப் பொகுட்டெமது
நன்னெஞ் செனக்குடிபுகும்
ஞானப் பிராட்டியைச் சொற்கடற் றெள்ளமுதை
நாத்தழும் பத்துதிப்பாம்
சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர் தப்பெருந்
தீர்த்தந் திளைத்தாடிய
செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற்
றெள்ளமுத மயமாகலான்
உறைபட்ட சுதைநிலவொ டிளவெயிலு மளவளாய்
உண்ணச் சகோரம்வெஃகும்
ஓங்கெயிற் பருதிபுரி முருகனைச் சண்முகத்
தொருவனைக் காக்கவென்றே. (9)

குளிர்ந்த துறைகளை உடைய பெரிய சித்தாமிர்தத்தின் வற்றாது தங்கிய நன்னீரில் முழுகித் திளைத்த செந்நிறத்தையுடைய சூரியனும், வெண்மதியைப் போலத் தெள்ளிய அமுதமயமாக ஆகுதலால், நிலைபெற்ற வெண்ணிலவுடன் இளமையான வெய்யிலும் உடன் கூடிப் பொருந்தச், சகோரப்புள், நிலவை உண்ணுதற்கு வெஃகி இருக்கின்ற உயர்ந்த மதில்களையுடைய பருதிபுரியிலே வீற்றிருக்கும் முருகப் பெருமானை—ஆறுமுகங்களை உடைய ஒப்பற்றவனைக் காக்க வேண்டுமென்று, வரம்புபட்ட வேதங்களை உடையவனாகிய நான்முகனது செவ்விய நாக்கிலே படிந்து, தனது வெள்ளைநிறம் கலந்து போகாமலும் பழைய வேதங்கள் கனிந்தூறுகின்ற அண்ணம், பல் ஆகியவற்றின் நீர் ஊறலினால் தூய்மையாகிய ஆடைகள் நனைந்து போகாமலும் தேன் பொருந்திய வெண்மையான இதழ்களையுடைய தாமரை மலர் என்று, எமது நல்ல நெஞ்சத்தில் குடிபுகுந்திருக்கின்ற ஞானப் பிராட்டியை–சொற்கடலில் தோன்றிய தெள்ளிய அமுதத்தை நாத்தழும்பும்படி துதிப்போமாக.

சத்த மாதர்கள்

பயிறரு முதுமறை நூலைத் தெரித்தவள்
பகைதொகு புரமெரி மூளச் சிரித்தவள்
பனிவரை பகநெடு வேலைப் பணித்தவள்
படுகடல் புகையெழ வார்விற் குனித்தவள்

எயிறுகொ டுழுதெழு பாரைப் பெயர்த்தவள்
எறிதரு குலிசம்வி டாமற் றரித்தவள்
இடுபலி கொளுமோர்க பாலக் கரத்தினள்
எனுமிவ ரெழுவர்க டாளைப் பழிச்சுதும்

கயறிரி சரவண வாவிக் கரைக்குரை
கழலொடு பரிபுர மோலிட் டிடக்கட
களிறெடு களிறெதிர் மோதத் திசைத்திசை
கடுநடை யுளதக ரேறச் சமர்த்தனை

முயறரு கறையொடு தேய்வுற் றிளைத்தொரு
முழுமதி குறைமதி யாகத் துகிற்கொடி
முகிலுடு தடமதில் வேதப் பதித்தனி
முதல்வனை யறுமுக வேளைப் புரக்கவே. (10)

கயல் மீன்கள் உலாவுகின்ற சரவணப் பொய்கையின் கரையில், ஒலிக்கின்ற வீரக் கழலோடு சதங்கைகள் ஓசைசெய்ய, மதங்கொண்ட யானைகளோடு யானைகள் எதிர் மோதும்படியாக எட்டுத் திசைகளிலும், விரைந்த நடையுடன் சென்ற ஆட்டுக் கடாவின் மேலேஏறிய அந்தச் சமர்த்து உடையவனை — முயல் தங்குதலால் உண்டாகிய களங்கத்தோடு, தேய்ந்து இளைத்து, ஒப்பற்ற பூரணச் சந்திரன் குறைச் சந்திரனாகும்படி துகிற் கொடிகள் மேகத்தைத் தொடுகின்ற, உயர்ந்த மதில்களை உடைய வேதபுரியில் வீற்றிருக்கின்ற–தனி முதற் பொருளை– ஆறுமுக வேளைக் காக்க வேண்டுமென்று பயிலப் பெறுகின்ற பழைய வேதங்களை அறிவித்தவளாகிய அபிராமியும் பகைமை உடைய முப்புரங்களையும் தீ உண்ணும்படி சிரித்தவளாகிய மாகேசுவரியும், குளிர்ந்த கிரவுஞ்சமலை பொடியாகும்படி நீண்ட வேலை விட்டவளாகிய கௌமாரியும் ஆழமான கடலில் புகையெழும்படி நீண்ட வில்லை வளைத்தவளாகிய நாராயணியும், பற்களைக் கொண்டு உழுது ஏழு நிலங்களையும் பெயர்த்தவ ளாகிய வாராகியும், எறியப் பெறுகின்ற குலிசத்தைப் புறத்தே விடாமல் தரித்தவளாகிய இந்திராணியும், இடுகின்ற பலியை ஏற்கும் கபாலத்தை உடைய கையினளாகிய காளியும் என்று சொல்லப் பெறுகின்ற சப்தமாதர்களது திருவடிகளை வணங்கு வோமாக.

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரு. 1–50 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	5 ஷிலிங் அல்லது ரு. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — இரண்டாம் கொத்து

இப்பாப் பத்தும் மனத்தைப் பரிபாகம் செய்யும் சிவசத்தி யனுபவம் எனக் காண்க. இனி, பிறப்பிறப்புக்கு உள்நடுவாகித் திருவருளை இரந்த திருவருள் விநியோக மாவன :—

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

(இ - ள்). யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்; இறப்பதனுக்கு என்கடவேன்? (எ - து)—தேவரீர் அடியேன் பக்குவமடைய நினைந்த நாள் தொடங்கி எனைப்பல யோனிகளில் பிறந்து பிறந்து வரப் பயமுற்றவனல்லனே! இறப்புக்கே என் செய்வேன் என அஞ்சுவனோ? நான் என் செய்வேன்? (எ - க); வானேயும் பெறில் வேண்டேன், மண்ணாள்வான் மதித்துமிரேன் (எ - து)—நாதனே! உன் சீர்பாதமன்றிப் பிறப்பிறப்பான வேதனைக்கு விண், மண் இரண்டின் உளவான பிறந்திறக்கும் தெய்வப்பிணங்களை அடியேன் வருந்திப் பெறுவதும் மதிப்பதுமில்லை (எ - க).

ஆனால், என் செய்வாய் என்னில்,

தேன் ஏயும் மலர்க்கொன்றைச் சிவனே! எம்பெருமான்! எம்மானே! உன் அருள் பெறும் நாள் என்று என்றே வருந்துவனே! (எ - து)—நாதனே! இன்பக்கொன்றைமலர்மாலை அணியும் சிவனே! ஆன்மநாதனே! தேவரீர், திருவுளப் பிரசாதம் பெறுவது எக்காலமோ என வருந்தி அடிமைத்தொழில் செய்வேனே ஒழிய வேறில்லை (எ - க).

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷெ நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

பெண்ணின் பெருமையும் கடமையும்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்

[மலர் 16. இதழ் 1-ன் தொடர்ச்சி]

சமுதாய சேவையில் பெண்களும் பெரும் பங்கு கொள்ள வேண்டும் என்று முழங்கும் இந்த நூற்றுண்டில், பண்டைக் காலத்திற்போலப் பெண்கள் இல்லத்தளவில் தம் கருத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் சரியா என்று சிலர் ஐயுறக்கூடும். அடிப்படையில், முரணில்லாது, இந்த இருநிலைகளையும் பிணைக்க வேண்டும். குடும்பக் கடமைகளைக் குறைவின்றி நிறைவேற்றிய பின்பு, பொது நலக் கடமைகளில் இயன்ற அளவு ஈடுபடுதல் முறையாகும்.

இல்லறக் கடமைகளை மனைவி இனிது நிறைவேற்றும் போதே தெய்வ பக்தியும் சீவகருணைத் தொண்டும் உடன் நிகழ்கின்றன. மனைவிக்கு ஆன்மீகப் பண்பாடு, வளர்வதோடு, அவளது சீலமும், வழிபாடும், கருணைச் செயலும், குடும்பத்திலுள்ளார் அனைவரையுமே புனிதப்படுத்துகின்றன. இவ்வாறு நன்னெறிச் சூழ்நிலையில் வளர்க்கப்படும் குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்த பிரசைகளாக – சமூக நலம் பேணுபவர்களாக – விளங்குவார்கள். நாடு சிறக்கும்.

காஞ்சியம்பதியில், உலக நாயகியாம் காமாட்சித் தாயார் இவ்விரு துறைகளிலும் பெண்ணினத்திற்கு வழி காட்டியருளியுள்ளார். அவர், "இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என உணர்ந்தார். உடனே, "அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தார்"- பூசித்தார். இவ்வாறு சிவபூசை செய்து காட்டிய அன்னையே, பின்பு அதே காஞ்சியில், 32 அறங்களையும் புரிந்து வழிகாட்டியருளினுர். காஞ்சிப் புராணத்திலுள்ள தழுவக்குழைந்த படலத்தில் இதைக் காணலாம். இப்பட்டியலில்* அடங்காத உண்மையான சமுதாய சேவைகள் உளவோ என்பதை அன்பர்கள் ஆராயலாம்.

'உலகீன்ற அன்னை', 'பின்னையும் கன்னி என மறைபேசும் ஆனந்தரூப மயில்' என்று தாயுமானுர் போற்றும் உமையம்

மையைத் தெய்வச் சேக்கிழார் "பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து" என்று குறிக்கின்றார். அம்பிகையின் அழகிய திருப் பெயர்கள் பல. அவற்றுள், 'அருந்தவநாயகி' 'அறம்வளர் செல்வி,' 'தர்ம சம்வர்த்தனி' போன்றவை நம் உள்ளத்தை உருக்கி உயர்த்துவன ஆகும்.

எனவே, தெய்வ வழிபாட்டிற்கும், மனையறத்திற்கும் இடையூறு நேராத வகையிலும் அளவிலும் பெண்மணிகள் சமுதாய சேவையில் ஈடுபடலாம். இக்காலத்திற்கு ஓர் எச்சரிக்கை தேவைப்படுகிறது; பொதுநலக்கடமை காரணமாக, அந்நிய ஆண்களோடு பேசவும் பணி புரியவும் நேரிடும்போது, பெண்கள் தமக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்படைகளின் துணை கொண்டு தமது தூய்மையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேனாட்டுப் பெண்களின் நடை உடை பாவனைகள், ஆண்களோடு கை குலுக்கல், நடனமாடல், அசைவ விருந்துண்ணல் போன்ற செயல்கள் பாரதப் பெண் மணிகளின் பண்பாட்டிற்கு ஒட்டினவல்ல என்றுணர்ந்து அவர்களிற் பெரும்பாலோர் கண்ணியமான முறையில் நடந்து கொள்வது போற்றத்தக்கது. இந்த நற்பண்பு எதிர்காலத்தில் குறையாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். பெண்களும் தற்காலக் கல்வி கற்றுப் பல துறைகளில் அலுவல்கள் பார்க்க வேண்டும் என்னும் விருப்பம் எழத் தலைப்பட்டுள்ளது. குழந்தைகட்கும், அப்பருவம் கடந்த பெண்கட்கும் ஆசிரியர்களாகவும், நோய்வாய்ப்பட்ட பெண்கட்கு மருத்துவர்களாகவும், தொண்டாற்றப் பெண்கள் கற்பன கற்றல் சமுதாய நலத்திற்குத் தேவையே. ஆனால் அலுவலகங்களில் ஆண்களினிடையே வேலை செய்வதும், சாமான் விற்பனை நிலையங்களின் பணி புரிவதும், உடலூரத்துடன் வெளியே சென்று பொறியியல் போன்ற வேலை செய்வதும் விரும்பத்தக்கனவல்ல.

அலெக்ஸஸ் கேரல் என்னும் முதறிஞர் தரும் எச்சரிக்கைகள் போற்றற்குரியன.

"Sexes have again to be clearly defined. Each individual should be either male or female, and never manifest the sexual tendencies, mental characteristics

and ambitions of the opposite sex. Instead of resembling a machine produced in series, man should, on the contrary emphasise his uniqueness."

We must liberate ourselves from blind technology and grasp the complexity and the wealth of our own nature.

–Ch. VIII. Sec 13 of "The Remaking of Man"
in Man the Unknown.

இத் தலைமுறையில் மற்றொரு பெரிய ஆபத்து பாரதப் பண்பாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. அதுதான் இழிந்த சினிமாவும் சினிமா விளம்பரப் படங்களும். இப்படங்களிற் பெரும்பாலானவை காம உணர்ச்சியைத் தூண்டுபவை. பாரத நாட்டின் பண்பாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பெரிய அவமானத்தையும் கேட்டையும் விளைப்பவை. பண்டைக் காலத்தில் விலைமகளிர் கூட்டமொன்று, தனியே ஊருக்குச் சாக்கடை போல் ஒதுங்கியிருந்தது. அதனைக் குலமகளிரும் நல்லோர் பிறரும் வெறுத்தனர். அக்காலப் பொதுமகளிர் சமுதாயத்திற்கு விளைத்த தீங்கைவிட, இக்காலச் சினிமா நடிகைகளிற் சிலர் பெண்ணின் பெருமைக்கு விளைக்கக்கூடிய தீங்கு மிக அதிகம் என்று அறிஞர் கண்டு கவலைப்படுகின்றனர். இறைவன் இவர்களையும் புன்னெறியிற் செல்லும் போக்கிலிருந்து விலக்கி, மேலாம் நன்னெறியிற் செலுத்தியருளுவானாக. தாய் தந்தையர்களும், ஆசிரியர்களும், சமுதாயத் தலைவர்களும், அரசாங்கமும் இந்த உண்மைகளை எல்லாம் ஊன்றி உணரவேண்டும். சிறுவர் சிறுமியர் உள்ளங்களில் மிருக உணர்ச்சியை எழுப்பும் சினிமா விளம்பரங்கள் வீதிகளில் தலைகாட்ட வொட்டாமல் முழுவேகத்துடன் தடுக்க வேண்டும். இழிந்த உணர்ச்சியை எழுப்பும் சினிமாக்களையும் கடுமையாக நிராகரிக்க வேண்டும். புனித உணர்ச்சிகளை வளர்க்க வல்ல முதல்தரமான நாடகங்கள்-நடிப்போர்க்கும் பார்ப்போர்க்கும் நன்மை பெருக்கக் கூடியவை—ஆதரித்தற்கு உரியவை.

பள்ளிச் சிறுமிகள் ஏகதேசமாகப் பள்ளி விழாக்களில் நல்ல சிறு நாடகங்களை நடித்தலும் நல்லதே.

ஒழுக்கத்தினின்றும் வழுக்கிவிட்ட பெண்களின் ஆடல்களைப் பார்ப்பதும், மானப் பாதுகாப்பு உணர்ச்சி இன்றிச் சில மாதர்கள் ஆடையணிவதும் அலங்காரஞ் செய்துகொள்ளுவதும், சீதா பிராட்டியாரையும், காரைக்காலம்மையாரையும், மங்கையர்க் கரசியாரையும் தந்த நம் பாரத நாட்டில் பிறந்த குல மகளிர் மேன்மைக்குச் சிறிதும் ஒவ்வாத செயல்களாகும். இத்தீமை சிறிது காலமாகத்தான் வளர்ந்து வருகிறது. இதனுல் இனி விளையக்கூடிய பெருந்தீங்கினை நம் அருமைச் சகோதரிகள் யாவரும் ஊன்றி உணர வேண்டும். உணர்ந்து, பெண்ணின் பெருமையைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்குத் தங்கள் தங்கள் இல்லங்களிலும், பள்ளிகளிலும், மாதர் சங்கங்களிலும் தீவிரமாக ஆவன செய்தல் வேண்டும்.

நம் தலைமுறையில் அவதரித்த புனித அன்னை சாரதாதேவியார் மகாத்துமாகாந்தியின் மாண்பார்ந்த மனைவியார் கஸ்தூரிபாய் போன்ற கற்புத் தெய்வங்களை நமக்கு லட்சியப் பெண்மணிகளாகப் போற்றவேண்டும். ஆணுயினும் பெண்ணுயினும் தம் ஐம்புலன்களை அடக்கி ஆள்வோர், மனிதகுலமாணிக்கங்களாய் மதிக்கப் பெறுவர்; தெய்வ நிலையை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வினை எய்துவர்.

பாடசாலைகளில் ஆசிரியர் பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்ற அருமைச் சகோதரிகள், சிறப்பு வகையில் முயன்று, தங்கள் மாணவிகள் உள்ளங்களில் இப்பண்பாட்டையும் வாழ்க்கைக் குறிக்கோளையும், தக்க சாதனங்களையெல்லாம் பயன்படுத்திப் பதிய வைப்பார்களானுல், அவர்கள் நாட்டிற்கும் பெண்குலத்திற்கும் மாபெரும் சேவை செய்தவர்களாவர். இதனுல் அவர்கட்குப் பெரும் புண்ணியமும் புகழும் கிடைக்கும்.

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்?”

“கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு” -திருவள்ளுவர்.

‘Serve, Love, Give, Purify, Meditate, Realise.’

—Swami Sivananda.

வாழ்க நற் பெண்ணினம்! வளர்க பல அறங்கள்! பக்தியும் கருணையும் பரவுக பாரெலாம்!

திருப்பனந்தாள் — ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ. பை.
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் ,,	...	0 56
8*	திருக்கோவையார்—பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9	ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1 50
10	,, ,, மூலம் மட்டும்	...	0 56
11	திருமந்திரம் (புதிய பதிப்பு)	...	2 25
12	பதினொருந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1 50
13	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3 00
14	பெரியபுராணம் உரை நடை	...	2 00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0 40
16	அகத்தியர் தேவாரத் திரட்டு (அச்சில்)		
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3 00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2 25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
20	கந்த புராணம் — முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2 75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2 00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3 00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
26	திருக்குறள் — காமத்துப்பால் ,, ஷை 24. 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை	...	1 25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
30	திருக்கைலாய ஞானவுலா — உரையுடன்	.	0 50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0 25
32	கந்தரனுபூதி மூலம்	...	0 13
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0 35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன்	...	0 37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0 10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும்	...	0 37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0 50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 06

Under No. R. No. 1485/57.
Reged No. M. 5574 குமரகுருபரன்

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) ...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம் ...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ...	0 50
48	குமாகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் ...	0 50
49	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை ...	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு ...	1 37
53	௸ ௸ பொருட்பால் 2-ம் பதிப்பு ...	2 75
54	௸ ௸ காமத்துப்பால் ௸ ...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன் ...	0 50
56	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்) ...	0 50
57	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ...	0 10
59	பழமொழித்திருமுறை ...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை ...	0 50
61	Hymns and Proverbs ...	0 10
62	அப்பர்விழா வெளியீடு ...	0 25
63	நவக்கிரகமாண்பு ...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் ...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.
"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறை பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -65.